# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 89 கார்த்திகை 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162









# லேபர் கட்சியும், லிபரல் கட்சியும் வேறுவேறு அல்ல!

## செனட்டர் பாத்திமா பேமன் எதிரொலிக்கு விசேட நேர்காணல்










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
கார்த்திகை 2024






# அவமானகரமான தமிழரின் தெரிவுகள்

● ஆர்.சுகந்தன்

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்தை அமைப்பதற்கான தேர்தல் நிறைவுக்கு வந்துள்ளது. யாரும் எதிர்பார்த்திராதபடிக்கு தேர்தல் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. ஜே.வி.பி.யின் பிரமாண்ட மீளெழுச்சி, தென்னாசிய அரசியல் மரபையே புரட்டிப்போட்டிருக்கின்றது. அதாவது இலங்கையின் அரசியல் பாரம்பரியமாக இருந்து வந்த குடும்ப ஆட்சியையும், பாரம்பரியக் கட்சிகளின் ஆட்சியையும் சரித்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி எனும் பேரலை. கொரோனாப் பேரிடரின் பின்னர் சிங்கள மக்கள் எதிர்கொண்ட பொருளாதார வீழ்ச்சியும், பசியும் இந்தப் பேரலையை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. அதன்படி முதலில் ஜனாதிபதி தேர்தலிலும், இப்போது நாடாளுமன்றத்தேர்தலிலும் தம்மை ஆட்சிசெய்வதற்கான புதிய சக்தியைத் தெரிவுசெய்திருக்கிறார்கள் சிங்கள மக்கள்.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் இலங்கையில் பெரியதொரு அரசியல் மாற்றத்தை செய்ததைப் போலவே வடக்கிலும் பெரும்மாற்றத்தை நிகழ்த்தியிருக்கின்றது. அதாவது இதுவரை காலமும், வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதான அரசியல் சிந்தாந்தம் தமிழ்த் தேசியமாக இருந்தது. தேசம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய கோஷங்களை உள்ளடக்கிய தமிழ்த் தேசிய அரசியல், நாடாளுமன்ற தமிழ்ப்பிரதிநிதித்துவத்தில் பெரும் செல்வாக்கு செலுத்திவந்தது. ஆனால் இம்முறை அது பெருவாரியான அடியை எதிர்கொண்டிருக்கிறது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள வன்னித் தேர்தல் மாவட்டமும், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திலும் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. அதாவது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகளின் வேட்பாளர்களை நிராகரித்து, தேசிய மக்கள் சக்தியின் பக்கம் சாய்ந்திருக்கிறார்கள். அதுவும் தமிழினத்தின் இன்றைய அவலங்களுக்கு எல்லாம் சித்தாந்தத் தளத்தில் வழிவகுத்த ஜே.வி.பி.யினர் பக்கம் சாய்ந்திருப்பதும் தமிழர் அரசியல் வரலாற்றில் ஓர் அவமானமாகக் கருதப்படக்கூடியது. இந்த அவமானம் ஏன் நேர்ந்தது ?

இதற்கான முழுப்பொறுப்பையும் இலங்கை தமிழரசுக் கட்சியே ஏற்கவேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக அமரர் இரா. சம்பந்தனும், அவரோடு இணைந்து பணியாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உள்ளிட்டவர்களும் எடுத்த எதேச்சாதிகாரமான தெற்கு நலன்சார்ந்த அரசியல் முடிவுகளும், அதனை மக்களிடமிருந்து மறைக்க அவர்கள் சொன்ன பொய்களும் தமிழ் தேசியத்தை மையப்படுத்திய கட்சிகள் மீதான வெறுப்பை ஏற்படுத்தியது. அதுபோதாதென்று இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட பதவிப் போட்டிகள், வழக்குகள் என்பன இந்த வெறுப்பு மனநிலையே மேலும் ஆழப்படுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தேர்தல் வரப்போகிற நேரத்தில் வெளியான சாராய ‘பார் லைசன்ஸ்’ விவகாரம் தமிழ் தேசிய கட்சிகள் மீதான தமிழ் மக்களின் மொத்த விரக்திக்கும் காரணமாகியது. தமிழ் தேசியம் பேசி வாக்குகளைப் பெற்றுவிட்டு, அவரவர் தம் சொந்த நலன்களுக்காக அதனைப் பயன்படுத்திக்கொள்கின்றனர் என்கிற விமர்சனம் பட்டிதொட்டியெங்கும் ஒலித்தது. அதனை மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் காட்டிவிட்டனர்.

அடுத்த காரணம், தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி. தேசிய மக்கள் சக்தி இனவாதப் பின்னணியைக் கொண்டிருப்பினும், அவர்கள் இந்தப் நாடாளுமன்றத்தேர்தலுக்கும், ஜனாதிபதி தேர்தலுக்கும் முன்வைத்த பரப்புரைக் கோஷம் மிக முக்கியமானது. புதிய வாக்காளர்கள் எனப்படும், புதிய இளந்தலைமுறையினரை இலகுவாகக் கவரக்கூடியது. இந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இங்கு அரசியல்வாதிகள் தொடக்கம் அரச திணைக்களங்கள் வரையில் இடம்பெறும் ஊழல்களே காரணம். ஊழல் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவந்து, பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டால், நாட்டில் இனங்களுக்கிடையில் சமத்துவம் ஏற்படும். எனவே அதனைச் செய்ய ஊழலற்ற, குடும்ப ஆட்சி பின்னணியற்ற எமக்கு அதிகாரத்தைத் தாருங்கள் எனக் கேட்டார்கள். அதனை ஏற்றுக்கொண்ட சிங்கள மக்கள் அனுரவை ஜனாதிபதியாக்கினர். அவ்விடத்திலும், தமிழ் மக்களுக்கு அரசியல் வழிகாட்டுகிறோம் எனக் கிளம்பிய தமிழரசுக் கட்சி, எவ்வித உத்தரவாதங்களுமின்றி சஜித் பிரேமதாஸவை ஆதரித்து மீண்டுமொரு அரசியல் தவறை செய்தது. தமிழர்களை வெட்கிதலைகுனியச்செய்தது. எனவே ஜனாதிபதி தேர்தலில் விட்ட தவறை நாடாளுமன்றத்தேர்தலில் விடக்கூடாது எனத் தமிழர்கள் முடிவெடுத்தனர். அதற்குப் பொருத்தமானதாக, தேசிய மக்கள் சக்தி முன்வைத்த கோஷமும் அமைந்தது. தனியே ஜனாதிபதி பதவியை மட்டும் தந்தால் ஊழலை ஒழிக்க முடியாது. ஊழல்வாதிகளைத் தண்டிக்க முடியாது. எனவே எங்களவர்களைக் கொண்டு நாடாளுமன்றத்தை நிரப்புங்கள் எனத் தேசிய மக்கள் சக்தி கேட்டது. அதில் நியாயமிருப்பதை ஏற்றுக்கொண்ட மக்கள், பெரியளவு பிரசாரங்கள் இல்லாத தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டி சின்னத்துக்கு வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் யாழ்ப்பாண, வன்னி தேர்தல் தொகுதிகளில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களின் அரசியல் அறிவென்பது பூச்சியமே. ஆனால் மக்கள் அதனையெல்லாம் கவனத்தில் கொள்ளாது திசைகாட்டியைக் கண்டால் புள்ளடியிடுவோம் என்கிற கணக்கில் வாக்களித்தனர்.

தமிழ்க் கட்சிகளின் பரப்புரைகளும் இம்முறை மிகப் பலவீனமாக இருந்தன. ஆதிகளவான சுயேச்சைக்குழுக்களும், கட்சிகளிலிருந்து பிரிந்து சென்றவர்கள் ஆரம்பித்த கட்சிகளுமாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் நாற்பதுக்கும் மேற்பட்ட தரப்புகள் போட்டியிட்டன. வெறும் ஆறு ஆசனங்களைப் பெறுவதற்காக 300இற்கும் மேற்பட்டவர்கள் பரப்புரை செய்தனர். இதனால் பரபரப்புரைகள் செய்ய தொண்டர்கள் இருக்கவில்லை. எனவே 1500 ரூபாவிலிருந்து 5000 ரூபாவரைக்கும் கூலிக்கு அமர்த்தப்பட்ட நபர்கள் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு பரப்புரை செய்தனர். ஒரே நபர் மூன்று கட்சிக்காக பரப்புரை வேலைகளில் ஈடுபட்டு சம்பாதித்தார். எனவே இந்தத் தேர்தல் என்பது அதிக பணம் புழங்கிய தொழில்வாய்ப்பாக மாறியது. யாரும் விசுவாசமாகவோ, தமது கட்சியின் வேட்பாளர் வெற்றிபெறவேண்டுமென்றோ பரப்புரையில் ஈடுபடவில்லை. அதேபோல கட்சிகள் நடத்திய கூட்டங்களுக்கும் பெரியளவில் மக்கள் கூடவில்லை. வேறிடங்களிலிருந்து சாப்பாட்டு பார்சல், உணவுப் பொட்டலங்கள் கொடுத்து பேருந்துகளில் ஏற்றிவரப்பட்டவர்களே கட்சிகளின் கூட்டங்களை நிரப்பினர்.

வாக்களிப்பில் ஈடுபட்டவரகளின் எண்ணிக்கையும் வழமையை விட வீழ்ச்சி கண்டிருந்தது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக வாக்காளர் பலர் புலம்பெயர்ந்துவிட்டனர். வீட்டில் இருப்பவர்கள் முதியவர்கள். அவர்கள் வாக்களிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. வாக்களிக்கத் தகுதியுற்றவர்கள், யாருக்கு வாக்களிப்பது என்பதில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக, வாக்களிப்பததைத் தவிர்த்துக்கொண்டனர். அதையும் மீறி ஜனநாயகக் கடமையை நிறைவேற்றப்போனோர் தம் வாக்குகளை செல்லுபடியற்றதாக்கினர். இந்த நிலைமைகள் தமிழ் தேசியம் பேசிய அரசியல் கட்சிகளின் வாக்குவங்கியை வெகுவாகப் பாதித்தது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட இம்முறை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்த, பிரதிநிதித்துவத்திலும் அது தாக்கம் செலுத்தியது.

மறுபுறத்தில் பெரியளவில் பிரபலமற்ற வேட்பாளர்களை தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கில் நிறுத்தியிருப்பினும், தனது தொழிற்சங்கங்களோடு தொடர்புடைய அரச உத்தியோகத்தர்களை களத்தில் இறக்கியது. அவர்களின் வெற்றிக்காக சக தொழிற்சங்கங்கள் இரவு பகலாக வேலை செய்தன. எனவே அரச உத்தியோகத்தர்களின் பெருமளவிலான வாக்குகள் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் போக, வெற்றியின் கதவைத் திறப்பது அவர்களுக்கு மிக இலகுவாக இருந்தது.

மற்றையது மருத்துவர் அர்ச்சுனாவின் வெற்றியும் யாரும் எதிர்பாராததது. தேர்தல் பரப்புரையின் முதன்நாள் வரைக்கும் டிக்டொக் மாதிரியான சமூக வலைதளங்களில் கெட்டவார்த்தைகளிலும், காதுகொடுத்து கேட்கமுடியாத சம்பாசணைகளிலும் ஈடுபட்டு வந்த மருத்துவர் அர்ச்சுனாவை நாடாளுமன்ற உறுப்பினராக்கியிருக்கின்றனர் தமிழர். இளையவர்களும், புலம்பெயர் தமிழர்களும் செய்த அபரிமிதமான பரப்புரையினால் இது சாத்தியமானது. அவருடன் சேர்ந்து போட்டியிட்ட பெண் வேட்பாளரான கௌசல்யா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரனை விட அதிக வாக்குகளைப் பெற்று ஆச்சரியப்படுத்தியிருக்கிறார். வடக்கில் மருத்துவ மாபியாக்கள் உருவாகிவிட்டன, அரச மருத்துவமனைகளில் ஊழல் இடம்பெறுகின்றது என தனது அரசியல் அஸ்திவாரத்தை அமைத்த அர்ச்சுனா அந்த விடயங்களில் துளியளவுகூட முன்னோக்கி நகரவில்லை. முன்பின் முரணான, சர்ச்சைகளை ஏற்படுத்தும் அவரது சமூக வலைத்தள உரையாடல்கள் மூலம் கடந்த மூன்று மாதங்களாகத் தன்னை பேசுபொருளாக வைத்திருந்தார். அவ்வாறு சமூக வலைதளங்களில் அவருக்கு ஏற்பட்ட ஆதரவும், ரசிக மனப்பான்மையும் இன்றைக்கு அவரையும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக்கியிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனம் உள்ளேயும் புறமுமாக முற்றாக சிதைவடைந்து வருகின்ற நேரத்தில் கட்டாயமாக அரசியல் ஸ்திரநிலை ஒன்று தேவைப்பட்டது. தமிழ் தேசியத்தை முதன்மைப்படுத்திய அந்த அரசியல் ஸ்திரநிலை மட்டும்தான் இந்த இனத்தை தக்கவைக்கும் சாத்தியக்கூறுகளும் தென்பட்டன. ஆனால் நடந்து முடிந்திருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல், அந்த அரசியல் அஸ்திரத்தை முற்றாக சாய்த்திருக்கிறது. தமிழர்களின் அரசியல் தெரிவு அவமானகரமானதாக மாறியிருக்கின்றது.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices & Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல்:07 அதிர்வு: 87 கார்த்திகை 2024 தொ.பே:1800 960 162

# (ஏ)மாற்றம்!

இலங்கையில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியை பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்களின் ஆதரவு அக்கட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ளமை வரலாற்று வெற்றியாக தென்னிலங்கையில் பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு அரசமைப்புமூலம் விகிதாசார விருப்புவாக்கு தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், தனிக்கட்சியொன்று நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்கு மேல் ஆசனங்களை வெல்வது இதுவே முதன்முறையாகும்.

தனிக்கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடந்த தேர்தலில் 145 ஆசனங்களை வென்றிருந்தாலும் அக்கட்சிக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு கிடைக்கப்பெறவில்லை. ஆனாலும் அநுர தரப்பின் வெற்றிக்கு இலங்கையில் வாழும் மூவின மக்களும் பங்களிப்பு வழங்கியுள்ளமையே புதியதொரு திருப்பமாக பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் யாழ்ப்பாணம், வன்னி உட்பட 21 தேர்தல் மாவட்டங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தை மாத்திரமே அக்கட்சியால் கைப்பற்ற முடியாமல்போனது.

257,813 வாக்குகளை பெற்றுக்கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எட்டு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. தமிழரசுக் கட்சி தனித்து களமிறங்கி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளது. யாழ்.மாவட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டிருக்காத பட்சத்தில் தமிழரசுக் கட்சிக்கு 10 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றிருக்கக்கூடும்.

சம்பந்தனின் மறைவின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல்போகும் என அஞ்சப்பட்ட நிலையில், அங்கு வியூகம் வகுத்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை தமிழரசுக் கட்சி தக்கவைத்துக்கொண்டுள்ளது. அம்பாறை மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளமை பெரும் வெற்றியாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு மாத்திரம் மூன்று ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. தமிழரசுக் கட்சி தலைமையில் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய தமிழ்க் கட்சிகளுக்கு பொதுத்தேர்தல் மரண அடியாக அமைந்துள்ளது. செல்வம் அடைக்கல நாதன் மட்டுமே வன்னியில் வெற்றிபெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களை தென்னிலங்கையில் உள்ள தேசிய கட்சியொன்று கைப்பற்றுவது இதுவே முதன்முறையாகும்.

தமிழ்த் தேசியத்தை வழிநடத்துவதற்கு சிறந்த தலைமைத்துவம் இன்மையும், தமிழ்க் கட்சிகள் சுயநல அரசியலுக்காக பிரிந்து நிற்பதுமே தமிழர் தயாகத்தை இன்று தமிழ்க் கட்சிகள் இழந்து நிற்பதற்கு பெரும் காரணமாகும்.

நாடாளுமன்றத் தேர்தலென்பது தமிழர்களின் இன இருப்பை நிர்ணயிக்கின்ற தேர்தலாகும். அத்தேர்தலைக்கூட வடக்கில் உள்ள தமிழ் கட்சிகள் முறையாக பயன்படுத்தாமை கவலைக்குரிய விடயமாகும். குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் இருந்து வடக்கு அரசியலை நடத்தும் சில தரப்புகளின் தவறான வழிநடத்தல்களும், தென்னிலங்கை கட்சிகள் தமிழர் தாயகத்தில் காலூன்றுவதற்கு பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.

தேசிய மக்கள் சக்தியென்பது இனவாதமற்ற, மதவாதமற்ற கட்சியாகும். எனவே, அப்படியொரு தென்னிலங்கை கட்சியை அரவணைப்பதன்மூலம் உரிமைகளை வென்றெடுக்கலாம் என தமிழர்கள் கருதி இருக்கலாம். ஏனெனில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் காத்திரமான விடயங்கள் முன்மொழியப்பட்டிருந்தன.

இதுவரை காலமும் தென்னிலங்கையை ஆண்ட தேசியக் கட்சிகள் தமிழர்களை ஏமாற்றியே வந்துள்ளன. தமிழ்த் தேசியக் கட்சிகளும் பேச்சு நடத்தி, உரிமைகளை வென்றெடுப்பதில் தோல்வி கண்டிருந்தன. இதனால் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும் தேசிய மக்கள் சக்தி அலை தமிழர் தாயகத்தில் உருவாக காரணம் எனலாம்.

இலங்கையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது, தேசிய இனப்பிரச்சினைக்கு, அனைவருக்கும் சம உரிமை என்ற நிலைப்பாட்டில் தேசிய மக்கள் சக்தி உள்ளது. எனவே, ஏற்பட்டுள்ள மாற்றத்தை தமிழர் தரப்பு தமக்கு சாதகமானதாக மாற்றிக்கொள்வதற்குரிய அரசியல் வியூகங்களைக் கையாள வேண்டும். புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களும் அதனை வலியுறுத்தி பரப்புரைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் இம்முறை ஏற்பட்டுள்ள மாற்றம்கூட தமிழர்களுக்கு ஏமாற்றமாகவே அமையும்.

# புத்துயிர் பெறும் நாஜிகள்



● சுபா.தயாபரன்

ஆஸ்திரேலியாவில் உள்ள பல மாநிலங்களில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களின் அலுவலகங்களுக்கு முன்னால் பல நாட்களாக அகதிக்கோரிக்கையாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் மெல்பேர்ணில் உள்ள உள்துறை அமைச்சரின் அலுவலகத்துக்கு முன்னால் சுமார் 100 நாட்களாக போராட்டத்தை அகதிகள் முன்னெடுத்திருந்தனர். அவ்வப்போது அமைதி வழிப் போராட்டத்தை குழப்பும் வகையில்' நியோ நாஜிகள்' என்று அழைக்கப்படுவோரால் சில விரும்பத்தகாத சம்பவங்களும் இடம்பெற்றன.

திடீரென ஒரு கும்பல், புகலிடக்கோரிக்கையாளர்களின் 100 ஆவது நாள் பேரணியை அத்துமீறி முற்றுகையிட்டது. கறுப்பு உடை அணிந்து முகத்தை மூடிக்கொண்டு தலையில் கம்பளித்தொப்பியை அணிந்து, தங்களை அடையாளம் தெரியாதபடி வந்த 20 பேர்கொண்ட 'நியோ நாஜிகள்' என்று நம்பப்படும் அந்தக் குழு, புகலிடக்கோரிக்கையாளர்களின் போராட்டம் நடக்கும் இடத்தை பலவந்தமாக ஆக்கிரமித்தது. இனவாத, வெள்ளை மேலாதிக்க துவேச வார்த்தைகள் அவர்கள் வாயில் இருந்து ஆக்ரோஷமாக வெளிவந்தன. பலமாக கோஷங்களை எழுப்பியபடி பேரணியை அவர்கள் குழப்ப முற்பட்டனர். இதனைத் தடுத்த பொலிஸார் அவர்களின் மீது மிளகாய்ப் பொடித் தாக்குதலை நடத்தி விரட்டினர்.

ஆனால் புகலிடக் கோரிக்கையாளர்கள் வன்முறையை விரும்பவில்லை. அவர்களிடம் ஒரு கட்டுப்பாடு உள்ளது. எந்த வகையிலும் தங்கள் சுய கட்டுப்பாட்டை இழந்து வன்முறையில் ஈடுபடக் கூடாது என்கின்ற புகலிடக் கோரிக்கையாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உறுதி மொழியே, அந்தச் சம்பவத்தை நிதானமாகக் கையாண்டு, அவர்களை அமைதியாக பயணிக்க வைத்தது. மற்றப்படி அவர்கள் கோழைகள் அல்லர் என்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது.

100 ஆவது நாள் அமைதிப்போராட்டத்தை வழி மறித்து குழப்பம் விளைவித்த நாஜிகள் அமைப்புக்கு எதிராக விக்டோரிய மாநில நாடாளுமன்றத்தில் அதிர்வலைகள் எழுந்திருந்தன. அது மட்டுமின்றி ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்திலும் கண்டனக் குரல்கள் எழுந்திருந்திருந்தன.

விக்டோரியா- என்எஸ்டபிள்யூ எல்லையில் கடந்த ஒக்ரோபர் மாத முற்பகுதியில் சுமார் 50 பேர் அடங்கிய நியோ நாஜிக்கள் ஒன்றுகூடியுள்ளனர் என்றும் வெறுப்பு மற்றும் பிரிவினைக்கு எதிராக ஒன்றுபடுமாறும் விக்டோரியா பிரிமியர் ஜெசிந்தா ஆலன் கோரிக்கை விடுத்துள்ளார்.


இந்த எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் நியோ நாஜிக்கள் அமைப்பைச் சேர்ந்தோரை வளைத்து பிடித்து நீதிமன்றில் முற்படுத்தி வருகின்றது பொலிஸ் துறை.

அத்துடன் நாஜி வணக்கம் செலுத்தியதாக பல்வேறு சம்பவங்களில் தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### நியோ நாஜி என்றால் என்ன?

நியோ-நாஜி என்பது "புதிய-நாஜி" அல்லது 'புத்துயிர் பெற்ற நாஜி" என்று பொருள்படும். குறித்த அமைப்பு 1933 மற்றும் 1945 க்கு இடையில் ஜெர்மனியை ஹிட்லரின் நாஜி கட்சின் சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்டது. ஜெர்மனிய வார்த்தைகளில் 'தேசிய சோசலிசம்" என்று பொருள்படுகிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)



## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# புத்துயிர் பெறும் நாஜிகள்




**ஆஸ்திரேலியாவில் அனைத்து இனங்களையும் விட வெள்ளையர்களே இன மேன்மையானவர்கள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். கறுப்பின மக்களும் யூதர்களும் அடிமட்ட மக்கள் என்ற கொள்கையில் உள்ளவர்கள். ஓரினச் சேர்க்கையாளர்கள், ரோமனிய மக்கள் ஆகியோர் மீதும் வெறுப்புணர்வைக் கொண்டவர்கள்.**

**(06ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் அடல்ஃப் ஹிட்லரின் பிறந்தநாளைக் கொண்டாடுவது, அவரது புத்தகமான ஆநனை முயஅிக ஐப் படிப்பது மற்றும் நாஜி வணக்கம் செலுத்துவது போன்றவற்றில் ஈடுபடுவார்கள். அதனால் அவர்கள் நியோ நாஜிக்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் அனைத்து இனங்களையும் விட வெள்ளையர்களே இன மேன்மையானவர்கள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். கறுப்பின மக்களும் யூதர்களும் அடிமட்ட மக்கள் என்ற கொள்கையில் உள்ளவர்கள். ஓரினச்சேர்க்கையாளர்கள், ரோமனிய மக்கள் ஆகியோர் மீதும் வெறுப்புணர்வைக் கொண்டவர்கள்.

ஜேர்மனியில் 1930களில் இன ரீதியாக தூய்மையான ஐரோப்பாவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் யூதர்கள் , நாடோடிகள் மற்றும் ஓரின சேர்க்கையாளர்களைக் கொலை செய்து தூய்மையான " இரத்தம் மற்றும் மண்" என்ற கொள்கையை உருவாக்கியிருந்தனர்.

ஹிட்லரின் நாஜி முழக்கங்களில் ஒன்றாகக் கருத்ப்படும் "இரத்தமும் மண்ணும்" என்ற வாசகத்தை நியோ நாஜிகள் "இரத்தமும் மரியாதையும்" என்று கோஷமெழுப்பி வருகின்றனர்.

நியோ நாஜிகளின் தலைமை அலுவலகத்தின் ஒரு வெள்ளை அறிவிப்பு பலகையில் யூத இனத்தை அழிப்பது - அமெரிக்கக் கறுப்பின மக்களை அழிப்பது போன்ற வாசகங்கள் காணப்பட்ட என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆஸ்திரேலியாவில் தூய்மையான வெள்ளையினக் கொள்கைகளின் அடிப்படையில் புதிய சமூகத்தை கட்டியெழுப்பவே இந்த நியோ நாஜி அமைப்பின் ஒரே நோக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு இனமும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தேசத்தில் இருக்கவேண்டும். ஆஸ்திரேலியா வெள்ளையர்களுக்கு மட்டும் என்பதில் அவர்கள் தெளிவாக உள்ளனர்.

நாஜி கட்சி மற்றும் ஆஸ்திரேலிய தேசிய சோசலிச வலையமைப்பு ஆகிய இரண்டின் பெயரிலும் "சோசலிசம்" அடங்கியிருந்தாலும், அவர்கள் உண்மையில் "சோசலிசத்தை" பின்பற்றவில்லை, இது பொதுவாக இடதுசாரித் தத்துவமாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

அடால்ஃப் ஹிட்லர், "தேசிய சோசலிச ஜெர்மன் தொழிலாளர்" கட்சியில் சேர்ந்து அதன் கட்டமைப்பையும் அதன் படையையும் கைப்பற்றி, அதன் மீது தனது இனக்கோட்பாடுகளைத் திணிக்கத் தொடங்கியவர். அதே போன்றே சோசலிசம் என்ற பெயரில் 'தி ஆஸ்திரேலியன் நியோ நாஜிக்களும்' ஹிட்லரின் நடை முறைகளையே பின்பற்றி வருகின்றனர்.

புலம்பெயர்ந்த சமூகத்தினரால் தங்களது வேலைவாய்ப்புகளோ அல்லது அவர்களால் தாங்கள் இவற்றை இழந்தோம் என்று கருதும் இளைஞர்கள் வயோதிபர்கள் இந்த நியோ நாஜிக்கள் அமைப்பில் இணைகின்றனர். அவர்களின் இழந்த அந்தஸ்தையும் மேன்மையையும் மீட்டெடுக்க போர் செய்ய வேண்டும் என்று உறுதி மொழி வழங்குகிறது இந்த அமைப்பு.



இவர்கள் ஆஸ்திரேலிய சமூகத்துக்கு மிகவும் ஆபத்தானவர்கள் என்று நாட்டின் புலனாய்வுப் பிரிவின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவர்களின் சித்தாந்தம் பயங்கரவாதத் தாக்குதலைத் தூண்டலாம், பெரும்பாலும் அவர்களின் கருத்துக்கள் மற்றும் வெறுப்புகளால் ஈர்க்கப்பட்ட நபர்கள் "டுழநெ றழடக்" என்ற நடவடிக்கையாக தனித்தனித்தாக்குதல்களை நடத்தலாம் என்ற அச்சத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டில் நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச்சில் மசூதி கொலைகளைச் செய்த ஆஸ்திரேலியரான ப்ரெண்டன் டாரன்ட், நியோ நாஜிகளின் சிந்தாந்தங்களுக்கு உட்பட்டிருந்தார் என்பது விசாரனைகளில் தெரிய வந்துள்ளது.

ஜனவரி 8, திங்கட்கிழமை 2024 இல் நடைமுறைக்கு வரும் அல்பானீஸ் அரசாங்கத்தின் முக்கியமான சட்டங்களில் நியோ நாஜி அமைப்புக்கு எதிரான சட்டங்களும் இடம் பெறும் எனதெரிவிக்கப்படுகிறது.

இன ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாகவுள்ள வெள்ளை மேலாதிக்கப் பிரசாரத்தை மேற்கொள்ளும் இந்த நவநாஜிக் குழுவினர் மீது கடுமையான சட்ட திட்டங்களை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளுவதன் மூலமே ஆஸ்திரேலிய அரசின் இனச் சார்பற்ற தன்மை வினைத்தன்மை மிக்கதாகக் காப்பாற்றப்படும். ■

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI


கார்த்திகை 2024 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


## மாவீரர் வார சிறப்பிதழ்



# போருக்குப் பிள்ளையைத் தந்த வானம்





● ஜெரா

இது மாவீரர் மாதம். தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்திருப்பின் இந்நாட்களுக்கு உணர்வுபூர்வமான அர்த்தம் கிடைத்திருக்கும். தம் பிள்ளைகளை நில மீட்புக்காக உவந்தளித்தவர்களின் பெற்றோர் உன்னத மிக்கவர்களாக மதிப்பளிக்கப்பட்டிருப்பர். தம் பிள்ளைகளைப் போருக்குக் கொடுத்தவர்களின் பெற்றோர் , தனித்து விடப்படாதிருப்பர். அவர்களை வறுமைக்குள் வாடவிடாது, பிரகாசமிக்க வாழ்க்கையொன்றினைப் புலிகள் உருவாக்கிக்கொடுத்திருப்பர். ஆனால் புலிகளின் மௌனிப்புக்குப் பின்னர், தம் பிள்ளைகளைப் போருக்குக் கொடுத்த பெற்றோரின் வாழ்க்கையும் அனேகமாக மௌனித்துவிட்டது. இருள் கவிழ்ந்துவிட்டது.

அப்படியாக இருளில் சிக்கிக்கொண்ட ஒரு தாயின் மெய்க்கதைதான் இது.

வயது 79ஐ நெருங்கிக்கொண்டிருக்கும் முத்தையா முனியம்மா வவுனியா வடக்கின் எல்லைக் கிராமமான முதுரம்பிட்டியில் வசிக்கிறார். அந்தக் கிராமத்தில் நேற்றுப் பிறந்த குழந்தைக்கும் முனியம்மாவைத் தெரிந்திருக்கும் அளவிற்குப் பிரபலமானவர். அன்பாகப் பேசுவதிலும், காயோ, பழமோ தன்னிடமிருக்கும் எந்த உணவையும் பகிர்ந்துகொடுப்பதிலும்தான் அவர் இத்தகைய பிரபலத்தைப் பெற்றார். இப்போது படத்திலிருக்கும் குடிசையில் தனித்துவிடப்பட்டிருக்கும் இவரின் பிள்ளைகள், கணவன் என குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் சுவரில் நினைவுப்படங்களாக மாட்டிவைக்கப்பட்டுள்ளனர். அயலிலிருக்கும் தோட்டங்களுக்கு நாளாந்த கூலி வேலைக்கு செல்லும் முனியம்மா, கூலிப்பணத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்துகிறார். அரசு கொடுக்கும் வீட்டுத்திட்டமோ, ஏனைய நிவாரண உதவிகளோ இவரை நாடிவருவதில்லை. புள்ளியிடல் அடிப்படையில் மூன்றுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்டவர்களுக்கே அரச நிவாரணங்களின் முன்னுரிமை என்கிற இலங்கையில் எழுதப்படாத சட்டத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டவர் முனியம்மா தான். எவ்வழியில் பார்த்தாலும் தனியே வாழும் ஒருவர் இந்தப் புள்ளியிடலை நெருங்கமுடியாது. இந்தப் புள்ளியிடல் சூட்சுமத்தை விளங்கிக்கொள்ளாத முனியம்மா, சில பல முயற்சித் தோல்விகளுக்குப் பின்னர், அரச உதவித் திட்டங்களுக்கு அலைவதை நிறுத்திக்கொண்டார். தனது பிள்ளைகள் தன்னோடு இருந்தால், இப்படி அலையவேண்டியிருக்காது. அதேவேளை இது போன்ற புள்ளியிடல்களில் முதன்மைநிலைகளையும் பெற்றிருக்கலாம் என்ற முடிவோடு, கூலி வேலைக்கே திரும்பிவிட்டார். இப்போதைக்கு உடலில் இயலுமை இருக்கும் வரைக்கும் இந்த வேலைகளில் கிடைப்பதை கொண்டு வாழ்ந்துவிடவேண்டும். இயலுமை உள்ளநேரமே இறந்துவிடவேண்டும் என்பது அவரின் மிச்ச வாழ்வினது இலட்சியமாக இருக்கிறது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னரான முனியம்மாவின் குடும்பம் பற்றி அவர் நினைவுமீட்கத் தொடங்கும்போது, முகமெல்லாம் ஆயிரம் நட்சத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்குகின்றன. மிகுதியான சந்தோசம் அவரை ஆட்கொள்ளத் தன் கதையைச் சொல்லத் தொடங்குகிறார்.

முனியம்மாவின் கணவர் கடுமையான உழைப்பாளி. அவரின் கடின உழைப்பினால், தன் ஒரே மகள் விஜயகுமாரியையும், ஒரே மகனான விஜயகுமாரையும், மனைவி முனியம்மாவையும் எவ்விதக் குறைகளுமின்றி கவனித்து வந்தார். அந்தக் கிராமத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடும், அன்போடும் வாழ்ந்த குடும்பங்களில் முதன்மையானது முனியம்மாவின் குடும்பம். முத்தையா - முனியம்மா இருவருமே அதிகம் படிக்காதவர்கள் என்றபோதிலும், தம் இரு பிள்ளைகளையும் நன்றாகக் கல்வி கற்கச் செய்துவிடவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தனர். பெற்றாரின் எண்ணத்தைப்போலவே பிள்ளைகளும் நன்றாகப் படித்தனர். கிராமப்புறப் பாடசாலையாக இருந்தபோதிலும், கல்விக்குக் குறைவிருக்கவில்லை.

1995ஆம் ஆண்டுகளுக்கு முன்பான வவுனியா வடக்கு எல்லைக்கிராமங்களின் வாழ்க்கை என்பது மிகுந்த அச்சுறுத்தலானது. வயல்களுக்கு செல்லும் ஆண்கள் வீடு திரும்பமாட்டார்கள். மாடு சாய்க்கச் சென்ற இளையவர்கள் வீடு திரும்பமாட்டார்கள். ஒரு கிராமத்திலிருந்து மற்றைய கிராமங்களுக்கு வேலைக்காக செல்பவர்கள் கூட வீடு திரும்புவது என்பது பலத்த சந்தேகம்தான். எல்லைக்கிராமங்களில் குடியேற்றம் செய்யப்பட்டிருந்த சிங்கள காடையர்களும், அவர்களோடு இணைந்த இராணுவத்தினரும், காடுகளுக்குள் வந்து பதுங்கியிருந்து கொண்டு, வேலைக்குச் செல்லும் தமிழர்களை பிடித்துச் செல்வது, சுட்டுக்கொல்வது, மாடு சாய்க்க சென்றவர்களை மாடுகளோடு சாய்த்துச் சென்று, காட்டுக்குள் வைத்து, அவர்களின் கழுத்தை அறுத்து மரங்களில் கொழுவிவிட்டுச் செல்வது, கைதுசெய்யும் ஆண்களை மரங்களில் கட்டிவைத்துவிட்டுச் செல்வது, ரயர்களை எரியூட்டி அதற்குள் தூக்கிப்போட்டு எரித்துவிட்டுப் போவது என பல்வேறு நாசகார வேலைகளை அரங்கேற்றினர். இந்த வகையில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் எந்தப் பதிவுமில்லை. செய்தியுமில்லை. இவ்வளவு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டுதான் அங்கே தமிழர்கள் வாழ்ந்தனர். இந்த அநியாயங்களைப் பார்த்து இளைஞர் யுவதிகள் கொதித்துப் போயிருந்தனர். எந்த வழியிலாவது போராடுவதற்கு அவர்கள் தயாராயிருந்தனர்.

இப்படியாக மக்களை போராடத் தூண்டிய காலப் பகுதியில்தான் விடுதலைப் புலிகள் முதிரம்பிட்டி கிராமத்தைக் கடந்து சென்று, பட்டிக்குடியிருப்பு என்கிற இடத்தில் முதல் முகாமை அமைத்தார்கள். அந்த முகாம் வரவிற்குப் பிறகு, காட்டுமிராண்டிகளின் அச்சுறுத்தல் சற்றுக் குறைந்தது. இதனால் ஆயுதங்களோடு வலம்வந்த புலிகள், மக்களுக்குப் மிகப் பிடித்தவர்களானார்கள். தங்களைப் பாதுகாக்க வந்த புனிதர்களாக மக்கள் அவர்களைப் பாதுகாக்கத் தொடங்கினர். அவர்களோடு இணைந்து பணியாற்றத் தொடங்கினர். இளைஞர்கள் ,யுவதிகள் புதிய போராளிகளாக மாறுவதில் அவ்வளவு ஆர்வம் காட்டினர். அந்தவகையில் முனியம்மாவின் மகளும் விரைவாகவே இணைந்துகொண்டார். ஆரம்பத்தில் தங்கள் ஒரே மகள், விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதில் விருப்பமில்லாதவர்களாக இருந்தபோதிலும், சிறிது காலத்தில், புலிகள் அமைப்பில் அனைவரும் இணைய வேண்டிய தேவையை அந்தக் குடும்பம் விளங்கிக்கொண்டது. மாதந்தோறும், தம் மகள் இருக்கும் முகாமைத் தேடிப்பிடித்து, உலருணவுப் பொருட்களை வழங்கிவிட்டு வருவதை முனியம்மாவின் குடும்பம் ஒரு வழக்கமான செயற்பாடாக மாற்றியிருந்தது.

இப்படியான காலப்பகுதியில்தான் ஜெயசிக்குறு படை நடவடிக்கையை சந்திரிக்கா அம்மையார் தொடங்கினார். அந்த நடவடிக்கையின் முதல் இலக்காக இருந்ததே முனியம்மா வசித்த எல்லைக்கிராமம் தான். எனவே அந்த எல்லைக்கிராமங்களிலிருந்த அனைத்து மக்களும் ஒரு சில மணிநேரங்களில் தம் அனைத்து உடைமைகளையும் விட்டு வன்னியின் பல்வேறு பாகங்களுக்கும் இடம்பெயரலாயினர். மடு, நட்டாங்கண்டல், ஒட்டுசுட்டான், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், அக்கராயன் எனப் பல கிராமங்களுக்கும் இடம்பெயர்ந்தனர். முனியம்மாவின் குடும்பம் வள்ளிபுனத்திற்கு இடம்பெயர்ந்தது. வள்ளிபுனம் பாடசாலையில் முனியம்மாவின் குடும்பம் தங்கியிருந்தபோதுதான், சில பெண் போராளிகள் அவரைத் தேடி வந்தனர். நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்து முத்தையாவைப் பார்த்ததும் அவர்களால் அந்தச் செய்தியைச் சொல்லமுடியவில்லை. நலம் விசாரித்ததோடு திரும்பிச் சென்றுவிட்டனர். பின்னர் முகாம் தலைவரோடு உரையாடி, பிரதேச அரசியல்துறை பொறுப்பாளரையும் அழைத்து வந்து, "அம்மா உங்கட மகள் மாவீரர் ஆகீற்றா" என்கிற செய்தியை தயங்கித் தயங்கிச் சொல்லிவிட்டனர். அந்த செய்தியைக் கடந்து சில நாட்களிலேயே முத்தையாவும் இறந்துபோனார். அதற்குப் பிறகு தன் மகனோடு உடைந்துபோனதொரு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தார் முனியம்மா.

2001ஆம் ஆண்டு ஓயாத அலைகள் படை நடவடிக்கையைப் புலிகள் நடத்தினர். ஒரே இரவில் முனியம்மாவின் கிராமமும் புலிகளிடம் விழுந்தது. இடப்பெயர்வுக்குள்ளேயே இளைஞனாக வளர்ந்து விட்ட முனியம்மாவின் மகனோடு 2002ஆம் ஆண்டில் மீளவும் ஊர்திரும்பினார். ஊர் திரும்பியதும், மகன் தாயைப் பார்த்துக்கொண்டார். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் எல்லை காக்கும் போராளிகளுக்கு உதவியாக செல்லும் பணி அப்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு பணியிலீடுபடுபவர்களை எல்லைப் படை வீரர்கள் என்று அழைத்தனர். 2005 ஆம் ஆண்டு முனியம்மாவின் மகன் உழவு இயந்திரமொன்றில் பண்ணை வேலைக்காக எரு ஏற்றிக்கொண்டு சென்றார். அவருடன் சேர்ந்து மரியான், சுரேஸ் ஆகியோரும் சென்றனர். அவர்களிடம் எரு அள்ளப் பயன்படும் மண்வெட்டியும், எரு அள்ளிக்கொட்டும் கூடையும், ஒரு உமல் பையும், அதற்குள் தேநீர் போத்தல் மாத்திரமே இருந்தது. இந்த உழவு இயந்திரத்தை இலக்குவைத்து இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் முனியம்மாவின் ஒரே நம்பிக்கையாக இருந்த ஒரே மகனும் உடல் சிதறி இறந்துபோனார்.

அதற்குப் பிறகு நடந்தவற்றை முனியம்மால் சொல்லவும் முடியவில்லை. கட்டுரையாளரால் கேட்கவும் முடியவில்லை. 2009 இடப்பெய ர்வு, 2011 மீள் குடியேற்றம், அதற்குப் பின்னரான அவரைத் தொடரும் வறுமையும் தனிமையும், அவரின் 79 வருட வாழ்வை நிலைகுலையச் செய்திருக்கிறது. வாழ்வின் மீதான எந்தப் பிடிமானமும் இல்லாது கைவிடப்பட்டிருக்கும் பல்லாயிரம் மாவீரர்களின் பெற்றோரின் மொத்த சாட்சியமாக இருக்கிறார் முனியம்மா.

'போருக்குப் பிள்ளைகளைக்
கொடுத்த வானம்
இன்னமும் அழுதுகொண்டிருக்கிறது' - என்கிற விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினியின் இறுதிக் கவிதையின் வாழும் சாட்சியமாகவும் முனியம்மா நம் முன் இருக்கிறார்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப் படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் "தகனம் செய்வது" தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# மாவீரர் வழிபாட்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

“எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

“ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்.”



## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



**“மாவீரர்**
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## நவம்பர்
## நிகழ்

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழி
களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும்.
பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து
நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்
பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவ
மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கப
படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலு
தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில்
வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சு
படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர்
வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்
மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும்
ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைக
முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர் அவர்களுக்
செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதும
இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், வி
இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரி
உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாட
படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நே
புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அ
வகையில் ஒலி,ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வே

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

# டு நடைமுறைகள்





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொரு இல்லங்களிலும், வாசலிலும் மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## 27 இரவு
## வுகள்

ழிபாட்டிடங்
. உயிர்காப்பு
ஊர்திகளும்
ட்டு அமைதி

வுடன் 6.06
ம் செலுத்தப்
யும் இருக்கும்
நிறுத்தி அக

சுடர் ஏற்றப்
சுடர் ஏற்ற
ன்னால் 5.15
ம் மேற்கொள்

ள், நடுகற்கள்
கெனஒழுங்கு

மக்கள் தமது
விளையாட்டு
ிய நேரத்தில்
டல் ஒலிக்கப்
நோக்கத்தைப்
ல்லது வேறு
வண்டும்.



## நிகழ்வு விதிகளில்
## அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும்சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்
### ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

● எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது

● அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத்தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



"பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே"

"இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது"

**- 1989**

"இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்"

**- 1990**

"நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாக-வோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்"

**- 1991**

"எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்"

**- 1992**

"எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தம-ிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது"

**- 1993**

"சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்"

**- 1994**

"யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது"

**- 1995**

"மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை"

**- 1996**

"மாவீரரின் வீர வழிபாட்டு மரபா-னது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்"

**- 1997**

"எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப்போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது"

**- 1998**

"போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது"

**- 1999**

"எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்" **- 2000**

"விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்"

**- 2001**

"தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன"

**- 2002**

"எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன"

**- 2003**

"சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை"

**-2004**

"சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனை-கதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்"

**-2005**

"சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடு-களையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்"

**-2006**

"எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமா-கத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்"

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" **-2008**



# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?

இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒருநாளில்வைப்பதால்எல்லோரும்அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.


அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





# மாவீரர் துயிலும் இல்லங்கள்



**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

**மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை**
**முடிசூடும் தமிழ் மீது உறுதி.**
**வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்**
**வரலாறு மீதிலும் உறுதி.**
**விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை**
**வீரர்கள் மீதிலும் உறுதி.**
**இழிவாக வாழோம், தமிழீழப் போரில்**
**இனிமேலும் ஓயோம் உறுதி.**

**தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய**
**சந்தனப் பேழைகளே! – இங்கு**
**கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?**
**குழியினுள் வாழ்பவரே!**
**உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்**
**உறவினர் வந்துள்ளோம் – அன்று**
**செங்களம் மீதிலே உங்களோடாடிய**
**தோழர்கள் வந்துள்ளோம்.**

**எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை**
**இங்கே திறவுங்கள்.**
**ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே**
**மறுபடி உறங்குங்கள்.**

**நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே**
**நாமும் வணங்குகின்றோம் – உங்கள்**
**கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு**
**சத்தியம் செய்கின்றோம்**
**சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்**
**சந்ததி தூங்காது – எங்கள்**
**தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்**
**தாகங்கள் தீராது.**

**எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை**
**இங்கே திறவுங்கள்.**
**ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே**
**மறுபடி உறங்குங்கள்.**

**உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது**
**உரைத்தது தமிழீழம் – அதை**
**நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்**
**நிச்சயம் எடுத்தாள்வோம்**
**தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்**
**தனியரசு என்றிடுவோம் – எந்த**
**நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்**
**நினைவுடன் வென்றிடுவோம்.**

**எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை**
**இங்கே திறவுங்கள்.**
**ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே**
**மறுபடி உறங்குங்கள்.**


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# லேபர் கட்சியும், லிபரல் கட்சியும் வேறுவேறு அல்ல!



## செனட்டர் பாத்திமா பேமன் அவர்களுடனான நேர்காணல்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**மேற்கு ஆஸ்திரேலியாவின் செனட்டர் பாத்திமா பேமன், ஆஸ்திரேலியாவின் குரல் கட்சியின் நிறுவுநர். வலுவான, ஒருங்கிணைந்த ஆஸ்திரேலியாவுக்காக போராடிவருகிறார். பல்வேறு சமூகங்களின் குரல்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும் அவரது கட்சி, நாடு முழுவதும் ஒற்றுமை, சமூக நீதி மற்றும் சமத்துவ வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முற்போக்கான கொள்கைச் சீர்திருத்தத்தை வலியுறுத்தும் அதே வேளையில் விளிம்புநிலை சமூகங்களின் தேவைகளுக்கும் இவரது கட்சி முன்னுரிமை அளிக்கிறது. எதிரொலி இதழுக்காக அவருடன் காணொளி வாயிலாக நிகழ்த்திய நேர்காணல் இது.**

**நேர்கண்டவர்:**



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**எதிரொலி : பல வேலைகளுக்கு நடுவில் எங்களுக்காக நேரம் ஒதுக்கியதற்கு எதிரொலி வாசகர்கள் சார்பாக நன்றி.**

**செனட்டர் பாத்திமா பேமன் :** ஆமாம். கான்பராவிற்கு செல்வதற்கு முந்திய நாட்களில் ஓயாத வேலைகள் இருக்கும்.

**எதிரொலி :ஒரு புதிய அரசியல் கட்சியைத் தொடங்குவதற்கு உங்களைத் தூண்டியது மற்றும் உங்கள் இயக்கத்தின் நோக்கங்கள் எவைகள் என்பதையும் கூற முடியுமா ?**

**செனட்டர் பேமன் :** "ஆஸ்திரேலியாவின் குரல் இயக்கம்' என்பது அனைத்துத் தரப்பு ஆஸ்திரேலியர்களுடன் நான் தொடர்ந்து பல முறை நடத்திய உரையாடல்களுக்கு பிறகு உருவாக்கப்பட்டது.ஒவ்வொரு சமூகத்தினரும்' எங்கள் குரல்கள் நாடாளுமன்றத்தில் ஒலிக்கவில்லை' என்று ஏங்குகின்றனர். இரண்டு பெரிய கட்சிகளினால் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்ட அவர்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும், இரண்டு பெரிய கட்சிகள் இடையேயான இரட்டையாட்சி முறை உடைக்கப்பட வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். மக்கள் ஒவ்வொரு முறை வாக்களிக்கும்போது இரண்டு தீமைகளில் குறைவான தீமைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு மாற்றாக நாங்கள் இருப்போம் . ஆஸ்திரேலியாவின் குரல் இயக்கம் என்பது பல்வேறு சமூகங்களின் நம்பிக்கைகள், மதிப்புகள், கொள்கைகள், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் கட்சியாக இருக்கும்.நாங்கள் தொழிலாளர் கட்சியை விட தைரியமாக இருக்கப் போகிறோம், ஆனால் பசுமைக் கட்சியை விட நாங்கள் மிகவும் நடைமுறை சார்ந்த விடயங்களுக்கு குரலாக இருப்போம். பசுமைக் கட்சி என்பது "எங்கள் வழி தனிவழி" என்பது எல்லோருக்கும் தெரியும் தானே. எனவே ஆஸ்திரேலியாவின் குரல் இயங்கும் ஒரு நடுநிலை உள்ளது, மேலும் நாங்கள் உண்மையில் மக்களிடமிருந்து கேட்க விரும்புகிறோம். ஏனெனில் பெரிய கட்சிகளைப் போலல்லாமல், முறையான ஆய்வுகள் இல்லாமல், முறையான ஆலோசனைகள் இல்லாமல் காற்றில் இருந்து பொருட்களைப் பறிக்க நாங்கள் விரும்பவில்லை. பல மசோதாக்கள் அரசாங்கம் லிபரல் கட்சியுடன் மோசமான ஒப்பந்தங்களைச் செய்து, வாக்காளர்களை உண்மையில் மோசடி செய்து வருவதை மக்கள் நன்கு அறிவார்கள். ஆஸ்திரேலியாவின் குரலுக்கு இதுவரை வேட்பாளர்களாக போட்டியிட விரும்பும், உறுப்பினர்களாக, தன்னார்வலர்களாக மாற விரும்பும் நபர்களிடமிருந்து பெருவாரியான ஆர்வத்தை காண முடிகிறது. மாற்றத்திற்கான வாய்ப்புகள் மிக நன்றாக இருக்கின்றன.

**எதிரொலி : ஆஸ்திரேலிய சில்லறை வர்த்தகத்தில் கோல்ஸ் மற்றும் வூல்வொர்த்ஸ் என்பன ஆதிக்கம் செலுத்துகின்றனவோ அதே போன்று அரசியலில் இந்த இரண்டு கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடக்கிறது. எதிர்க்கட்சியில் யார் வந்தாலும் அவர்கள் போன-முறை எதிர்க்கட்சியில் யார் இருந்தார்களோ அவர்கள் பேசுவது போலவே இருக்கிறது . ஆளுங்கட்சியும் அவ்வாறே தான். அவர்களின் தொனி ஒன்றுதான், குரல் ஒன்றுதான். இங்கு எந்த மாற்றத்தையும் காண முடிவதில்லை. அந்த நிலை ஏன்?**

**செனட்டர் பேமன் :** பாரம்பரிய தொழிலாளர் கட்சி வாக்காளர்கள் தங்கள் கட்சியின் செயல்பாடுகளால் அதிருப்தி அடைந்திருப்பதை காண முடிகிறது . தொழிலாளர் கட்சி வலது சாரியாக மாறிவருகிறது என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். அவர்கள் தாராளவாதிகள் மற்றும் பீட்டர் டட்டன் போன்றவர்களைப் போன்றே, முடிவெடுக்கிறார்கள் உங்களுக்குத் தெரியும் தானே. அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் கடலோரக் காவல் கொள்கைகள், நாடுகடந்த ஏதிலிகள் பாதுகாக்கும் இடங்களை மூடுதல் என்று எல்லா விடயங்களிலும், உண்மையான தொழிற்கட்சியின் முற்போக்கு மதிப்புகள் எங்கே இருக்கின்றன. கோஃப் விட்லமில் (Gough Whitlam), பாப் ஹாக்கின் (Bob Hawke) நாட்களில், அவர்கள் உண்மையிலேயே தைரியமாக தாங்கள் நம்பும் கொள்கைகளுக்காக நேர்மையாக நின்றார்கள். இப்போது, அவர்கள் தங்களை லிபரல்களுடன் ஒப்பிட்டுக் கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் முர்டாக் ஊடகங்களைப் பார்த்து மிகவும் பயப்படுகிறார்கள். மேலும் கூட்டணி, தாராளவாதிகள் மற்றும் தேசியவாதிகள் கும்பல் தொழிலாளர் கட்சிக்கு எதிராக அவதூறு பிரசாரம் செய்வார்கள் என்று பயப்படுகிறார்கள். ஆனால் அதுதான் அரசியல். நீங்கள் ஒரு படி கூட முன்னோக்கி எடுக்காமல் பயப்பட முடியாது. அதனால் நீங்கள் அங்கேயே தேங்கி நிற்கிறீர்கள். நீங்கள் முன்னேறவில்லை.

**எதிரொலி : உங்கள் கட்சியைப் பற்றி நீங்கள் குறிப்பிடும் போது பசுமைக் (Greens) கட்சியிலிருந்து வேறுபட்டதாக இருக்கும் என்று கூறினீர்கள். இனப்பிரதிநிதித்துவம் என்று வரும்போது, நீங்கள் எப்படி ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள பல்வேறு இன சமூகங்கள் ஆஸ்திரேலிய அரசியலில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட செய்ய முடியுமென்று நினைக்கிறீர்கள் ? அதற்கான வழிவகைகள் உங்கள் கட்சியின் கொள்கைகளில் இருக்கின்றனவா ?**

**செனட்டர் பேமன் :** ஒரு புலம்பெயர்ந்த பின்னணியில் இருந்து வந்தவள். என் அப்பா ஒரு அகதி. என் கதை எனக்கு மட்டும் தனித்துவமானது அல்ல.இதேபோன்ற கதையைப் பகிர்ந்து கொள்ளும் பலர் ஆஸ்திரேலியாவைச் சுற்றி உள்ளனர். உங்களுக்குத் தெரியும், பெற்றோர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து, படகில்ஏறி, ஆஸ்திரேலியாவுக்கு வருகிறார்கள், அவர்கள் 24 மணி நேரமும் கடினமாக உழைத்து, தங்கள் பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெறுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். குழந்தைகள் வளர்ந்து வெற்றியடைகிறார்கள், அவர்கள் சமூகத்திற்கு கூடுமானவரை பங்களிக்கிறார்கள். எனவே, பன்முக கலாசார மற்றும் இனக் குழுக்களின் பிரதிநிதித்துவத்துடன், அவர்கள் என்னைப் பிரதிபலிப்பதாகவும் நான் உணர்கிறேன். அவர்கள் தங்கள் குழந்தைகளை என்னில் பார்க்கிறார்கள். நமது நவீன ஆஸ்திரேலியா, வளர்ச்சியடைந்த பன்முக கலாசாரம் மற்றும் மிகவும் வெற்றிகரமான பன்முக கலாசார நாடுகளில் ஒன்றாகும்.இது விரைவில் அனைத்து சமூகங்களின் குரல்களையும் உயர்த்துவதற்கான வாய்ப்பைப் பெறும். ஆங்கிலோ சாக்சன்கள் இனங்கள் மட்டுமல்ல . எல்லா இனங்களும் பிரதிநிதித்துவம் பெறும் நாள் வரும். என்னைப் பொறுத்தவரை, புலம்பெயர்ந்தவர்களை ஒரு கேடயமாக பயன்படுத்துவது எப்படி என்பதை நான் உணர்ந்ததால், வேறு எந்தக் குழுவுக்கும் நான் அதைச் செய்ய மாட்டேன். ஒரு பன்முக கலாசார சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்த நாங்கள் உறுதியளிக்கும் போது, எல்லாத் தரப்பு மக்களும் வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு வழிகளில் தங்களை நடத்துவது, அவர்களின் கலாசார உடை, உணவு, புனிதமானவை என்பதை நாம் உணர வேண்டும். எல்லா கலாசார உணர்வுகளும் மதிக்கப்பட வேண்டும். உண்மையான பிரதிநிதித்துவம் என்று வரும்போது, அது எல்லாச் சமூகங்களில் இருந்து உண்மையாக வர வேண்டும். சமூகம் தான் முக்கியம் .

**எதிரொலி : இந்த இரண்டு கட்சிகளும் இத்தனை ஆண்டுகளாக புலம்பெயர்ந்தோரை ஒரு அடையாளமாகப் ( வாக்கு வங்கி )பயன்படுத்தினர். இப்பொழுது உங்கள் கட்சி புலம்பெயர்ந்த சமூகத்தின் தேவையை நிவர்த்தி செய்யும் என்று சொன்னால் மைய அரசியலில் விலகி இருப்பது போல் ஆகிவிடுமே ?. ஆஸ்திரேலிய மக்களில் பெரும்பான்மையானவர்களை உங்கள் கட்சியில் இருந்து விலகி இருக்க செய்துவிடும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதே ?**

(19ஆம் பக்கம் பார்க்க)

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

**செனட்டர் பேமன் :** இல்லை, ஏனென்றால் சராசரி ஆஸ்தி ரேலியர் உங்களை வித்தியாசமாக என்றும் பார்ப்பதில்லை. அவர்கள் உங்களை எல்லோரையும் போல் சக ஆஸ்திரே லியராகவே பார்க்கிறார்கள். ஆனால் சிறுபான்மை இனவாதி கள் மற்றும் மதவெறியர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் தீவிர வலதுசாரி வெள்ளை மேலாதிக்க மனநிலை யால் பாதிக்கப்பட்டவர்கள். ஆனால் சராசரி ஆஸ்திரே லியர்களுக்கு புலம்பெயர்ந்த சமூகத்தின் மேல் எந்தப் பிரச்சினையும் இல்லை,நாம் ஒரு வெற்றிகரமான பன்முக கலாசார சமூகம். அகதிகள் அல்லது படகு மூலம் புலம்பெயர்ந்து வரும் மக்கள் குறித்தான தவறான அபிப்பிராயங்கள் இங்கே பரப்பப்பட்டுள்ளன . ஹோவர்டின் காலத்தில் படகுகளின் மூலம் புலம்பெயரும் மக்களை தவறானவர்கள் என்று பயமுறுத்தும் பிரசாரம் இருந்தது. என் அப்பா படகில் இங்கு வந்தார். அவர் இந்த சமுதாயத்திற்கு எவ்வளவோ பங்களித்தார். அவர் நேர்மையான குடிமகனாக தனது வரிகளைச் செலுத்தினார். அனைத்து படகு வழி வரும் அகதிகளும் தடை செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் கூற முடியாது . தங்கள் நாட்டில் வாழ வழியின்றி, போக்கிடமின்றி, ஆஸ்திரேலியா நோக்கி புகலிடம் கோரி வரும் அகதிகளைப் பயமுறுத்தக் கூடாது . நான் பார்த்த பெரும்பான்மையான ஆங்கிலோ சாக்சன் வெள்ளையர்கள் மிகவும்நல்லவர்கள். புலம்பெயர்ந்தோர் மேல் அனு-தாபம் கொண்டவர்கள். அவர்கள் இருகரம் கூப்பி அகதி-களை ஏற்றுக்கொள்ளும் மனம் படைத்தவர்கள் . இங்கே ஆஸ்திரேலியாவில் படகுகளில் பயணிக்கும் உண்மையான அகதி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் , கடத்தல்காரர்கள் அவர்களை சாதகமாக பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆனால் அதே நேரத்தில் நமது குடியேற்ற அமைப்பையும் சரி செய்ய வேண்டும். தொழிலாளர் கட்சியின் '90 நாட்களில் அகதி விசாரணை முடிவை எடுப்போம்' என்ற வாக்குறுதி என்ன ஆனது?. “பெரும்பான்மையான புகலிடம் கோரிய மக்கள் பல வருடங்கள் தங்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை விட்டு விலகி, எந்த வேலையும் செய்ய முடியாமல் , வேலை செய்யும் உரிமைகள் இல்லாமல் , குடியேற உரிமை இல்லை மற்றும் வீடு வாங்க உரிமை இல்லை என்று பல்வேறு கொடுமைகளை ஒவ்வொரு நாளும் அனுபவித்து வருகிறார்கள். இது பெருந்துன்பம்.

**எதிரொலி : அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தீவிர வலது சாரி டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இந்தச் சூழலில் மெல்பேர்ன் மற்றும் பிற பகுதிக ளில் வளர்ந்து வரும் நவ நாஜி (Neo-Nazi) கலாசாரம் பற்றிய உங்கள் கருத்துக்கள் என்ன ? இவர்களிடமிருந்து புலம்பெயர்ந்த சமூகத்தினரை எவ்வாறு காப்பது ?.**

**செனட்டர் பேமன் :** நாங்கள் இங்கிலாந்தில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்து வருகிறோம், புலம்பெயர்ந்தோர் குறிப் பாக மத்திய கிழக்கு பின்னணியில் அல்லது மாநிற நிறத்தில் உள்ளவர்கள் குறிவைக்கப்பட்டு தாக்கப்படுகிறார்கள் . அவுஸ்திரேலியாவில் நாங்கள் சமூக ஒற்றுமையைப் பற்றி பேசுகிறோம், கருத்து வேறுபாடுகள் இருப்பினும் மாறாக நாம் ஒவ்வொருவருக்கும் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது. நாம் எல்லாவற்றிலும் உடன்பட வேண்டிய அவசியமில்லை.

எந்தக் கட்சியுடனும் சேராமல் நான் நடுநிலை முடிவை எடுத்தபோது, எனக்கு எவ்வளவு எதிர்ப்புகள் வந்தன. என் மதத்தை ஏன் ஆயுதமாக்குகிறாய்? ஏன் உன்னை வேற்றுக்கிரகவாசி போல் காட்டுகிறாய்? என்று எவ்வளவோ எதிர்ப்புகள். எனது வெற்றியை கொண்டாடிய அதே தொழிலாளர் கட்சி, ஒரு பயங்கரமான நபராக என்னைச் சித்திரிக்க செய்ய என்னவெல்லாம் முயற்சி செய்தார்கள்

பன்முக கலாசார ஆஸ்திரேலியாவின் பார்வையில் தொழிலாளர் கட்சி மரியாதையை இழந்துவிட்டது. ஏனென்றால் மக்கள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வேலை செய்யும் போது, நீங்கள் அவளை மதித்தீர்கள் . நீங்கள் அவளை யும் உங்கள் குழுவில் இணைத்து மகிழ்ச்சியுடனிருந்தீர்கள். ஆனால் இப்போது அவள் தன் சொந்தக் குரலைக் கண்டுபிடித்து, கொள்கை அடிப்படையில் அவள் உங்களுடன் உடன்படவில்லை என்றதும் அவளைப் பேருந்தின் கீழ் தூக்கி எறியத் தயாராக இருக்கிறீர்கள் .

பூர்வகுடி மக்களின் குரல் வாக்கெடுப்பில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும், , உதாரணமாக, இஸ்லாமோஃபோபியா இங்கே வெகு சாதாரணமாக இருப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலை பற்றி பேசவே மக்கள் பயப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் மீது யூத எதிர்ப்பாளர்கள் என்ற சாயம் பூசப்பட்டுவிடலாம். ஆனால் அதைவிட ஆயிரம் மடங்கு அதிகரித்துள்ள பாலஸ்தீன துவேஷ அல்லது முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு சாதாரணமாகிவிட்டது. புலம்பெயர்ந்தோர் என்றால் 'வாயை மூடிக்கொள்ளுங்கள், வம்பு செய்யாதீர்கள், எதற்கும் குறை சொல்லாதீர்கள். இந்த நாட்டில் இருக்கிறீர்கள் என்பதற்கு நீங்கள் நன்றியுடன் இருக்க வேண்டும்'என்றுதானே இவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்

மேலும் புலம்பெயர்ந்த சமூகங்கள் மீது இவ்வாறு மோசமான வெறுப்பையும் பிறவற்றையும் பரப்பும் அரசியல்வாதிகளின் எண்ணங்கள் மாறவேண்டும்.



# லேபர் கட்சியும், லிபரல் கட்சியும் வேறுவேறு அல்ல!

அப்படியானால், புதிய நாஜிக் குறியீடுகளுக்குத் தடை விதிப்பதோடு மற்றொரு இனக் குழுவைப் புண்படுத்தக்கூடிய வெறுப்புச் சின்னங்கள் மற்றும் செயல்கள் எல்லாமே தடை செய்யப்பட வேண்டும் .

ஆனால், மதப்பாகுபாடு சட்டத்தின் மூலமாகவோ அல்லது மனித உரிமைச் சட்டத்தின் மூலமாகவோ அவதூறு தடுப்புச் சட்டங்கள் நடைமுறைக்கு வர வேண்டும். அது அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடாது. உங்களுக்குத் தெரியும், எனக்கு சீக்கியப் பின்னணியில் இருந்து வந்த நண்பர்கள் கிடைத்துள்ளனர், அவர்கள் தங்கள் தலைப்பாகை அணிவதைப் பற்றி கவலைப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்களுக்கு இஸ்லாத்துடன் எந்த தொடர்பும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால். மொத்த சூழ்நிலையிலும், இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கும்போதும், அவர்கள் முஸ்லிம்கள் என்று தவறாகக் கருதப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, அவமதிக்கப்படுகிறார்கள், அது அர்த்தமற்றது. அதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற உறுப்பினர்களுடன் இணைந்து இந்த அநியாயத்துக்கு எதிராக உறுதியுடன் செயற்படுவேன் .

எடுத்துக்காட்டாக, மனித உரிமைச் சட்டத்தின் கீழ் மக்களுக்குத் தகுதியான பாதுகாப்பை வழங்கும் மசோதாக்களை முன்வைக்க தொடர்ந்து போராடுவேன்.

**எதிரொலி : ஆம், காசா மோதல் மற்றும் இனப்படு கொலை நடப்பதைப் பற்றி நாங்கள் பேசும் அதே வேளையில் உலகளவில் நிகழும் இனப்படுகொலைச் செயல்களை ஒப்புக்கொண்டு பதிலளிக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இன்று காஸாவில் நடக்கிறது தானே இலங்கையில்அன்று நடந்தது . ஆஸ்திரேலிய அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?**

**செனட்டர் பேமன் :** இது ஒரு இனப்படுகொலை என்பதை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு அரசாங்கம் முதலில் தைரிய மாக இருக்க வேண்டும். நீங்கள் சொல்வது முற்றிலும் சரி. இனப்படுகொலை இஸ்ரேலால் பாலஸ்தீனத்தில் மட்டும் நடைபெறவில்லை, உலகம் முழுவதும் நடைபெறுகி றது. நாம் உலகம் முழுவதிலும் நடக்கும் அநீதிகளைப் பார்க்கிறோம், ஆக்கிரமிப்பு சக்திகள் அப்பாவி மக்களைத் துன்புறுத்துகிறது நாம் பார்க்கிறோம் அல்லவா.

எனவே, குறிப்பாக காஸாவைப் பொறுத்தவரையில், ஒடுக்குமுறையையும் ஆக்கிரமிப்பையும் முடிவுக்குக் கொண்டு வருமாறு நமது அரசாங்கம் இஸ்ரேலை வற் புறுத்த வேண்டிய கடமை இருக்கிறது .அதே நேரத்தில் ஆஸ்திரேலியாவும் அதன் இறையாண்மையை தீவிர மாக எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் நமது சொந்த தேசிய வெளியுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்தி செயல்படுத்த வேண்டும். அந்த கொள்கையானது நமது நலன் சார்ந்து இருக்க வேண்டுமேயொழிய அமெரிக்கா, இஸ்ரேல் அல்லது வேறு வெளி நட்பு நாடு அல்லது சக்தியின் நலன்களுக்காக இருக்க கூடாது. நீங்கள் முன்பு குறிப்பிட்டது போல் இங்கே வெளிப்படையான இரட்டை நிலை உள்ளது. உக்ரேனிய அகதிகள் ஏற்கப்படும் விதத்தை நீங்கள் பார்க்கிறீர்கள், அவர்களுக்கு புகலிட வாய்ப்புகள் எளிதாக இருந்தன. . உய்குர் மக்கள் மீது சீன அரசாங்கம் திணித்த மீறல்கள் மற்றும் பல தசாப்தங்களாக அது எவ்வாறு நடந்து வருகிறது என்பதைப் பற்றி பேசும் உய்குர் பின்னணியைச் சேர்ந்த பெண்ணை நான் சந்தித்தேன்.. எனவே, நீங்கள் சொன்னது போல், இனப்படுகொலை என்பது காஸாவில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் உள்ளது.ஆஸ்திரேலிய அரசாங்கம் மனித உரிமை சட்டங்களை செயல்படுத்துவதற்கும் மதிப்பதற்கும் மற்றும் அந்த சட்ட மீறல்களை வெளியே கொண்டுவருவதற்கும் மிகவும் தைரியமான பங்கை எடுக்க வேண்டும், ஏனெ-னில் சர்வதேச மனிதாபிமான சட்டம் அழகாக இருக்க மட்டும் இல்லை. நீங்கள் வெள்ளை , கருப்பு .மாநிறமாக இருந்தாலும் அனைத்து மக்களுக்கும் ஒரே மாதிரியான மனித உரிமைகளை நாங்கள் நிலைநிறுத்துவது மற்றும் நடைமுறைப்படுத்துவதும் எங்களது கடமையாகும்.

**எதிரொலி : இப்போது நடந்து முடிந்த அமெரிக்க தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் டிரம்பின் முக்கியமான அதிகாரிகளின் தேர்வு அதிர்ச்சியடைய வைக்கிறது. உலக அரசியல் எவ்வாறு நகரும் என்பதை நினைக்கும்போதே பதறுகிறது , மேலும் காசா மோதல் கடைசியாகப் போகிறது. உங்களுக்குத் தெரியும், காசா யுத்தம் கடந்த 13 மாதங்களுக்கும் மேலாக நடந்து வருகிறது. மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் எவ்வாறு ஆஸ்திரேலிய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்கள் ?**

**செனட்டர் பேமன் :** இந்த முடிவுகள் பேரழிவை ஏற்படுத்தப் போகின்றன என்பதை எண்ணிக் கவலை கொள்கிறேன். அமெரிக்கத் தேர்தல்கள் முடிவுகள் இங்கே நமது அரசியல் அமைப்புச் செயல்படும் விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்து கின்றன. எடுத்துக்காட்டாக, அமெரிக்கத் தூதர் கெவின் ரூட்டிற்கு என்னவாகும் என்று தெரியவில்லை , ஏனென்றால் கெவின் ரூட்டுக்கும் டிரம்ப்புக்கும் இடையேயான பிணக்கு நமக்குத் தெரியும். அதனால் அவர் மீண்டும் ஆஸ்திரேலியா வுக்குத் திரும்பப் போகிறாரா, இல்லை தூதராகத் தொடர்வாரா என்றும் எனக்குத் தெரியவில்லை.

ஆனால் ட்ரம்பின் சில கொள்கைகள் புலம்பெயர்ந் தோருக்கு எதிராக இருக்கின்றன. அது கலாசார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் வேறுபட்ட சமூகங்களுக்கு எதிரா னவை மட்டுமல்ல , உழைக்கும் வர்க்கத்துக்கும் எதிரானது என்பதை நான் அறிவேன்.

ஆனால் டொனால்ட் ட்ரம்ப்புக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்,' பல பில்லியன் டொலர் மதிப்புள்ள யுருமுருளு ஒப்பந்தத்தை தடுத்து நிறுத்த வேண்டும்' என்று. ஏனெனில் பில்லியன் கணக்கான டொலர் செலவழித்து உருவாக்கும் நீர்மூழ்கிகள் நமக்கும் எந்தப் பயனையும் அளிக்கப்போவதில்லை பயனளிக்காது. எனவே அந்தப் பணத்தில் கொஞ்சம் கிடைத்தாலும் நமது பல பிரச்சினை களைச் சரி செய்ய முடியும் . குறிப்பாக அகதிகள் குடியேற்றப் பிரச்சினை , வாழ்விடப் பற்றாக்குறை நெருக்கடி மற்றும் பல.

**எதிரொலி : என்னுடைய அனுபவத்தில் உங்களைப் போன்ற துணிச்சல் வாய்ந்த அரசியல்வாதியைப் பார்த்ததில்லை. தான் நம்பும் கொள்கைக்காக, தனது இனத்திற்காக கட்சியை துறந்தவர் நீங்கள். எங்களைப் போன்ற புலம்பெயர்ந்த சமூகத்திற்கு உங்கள் செய்தி என்ன? அவர்கள் எப்படி ஆஸ்திரேலிய அரசியலில் ஈடுபட வேண்டும் ? , அவர்களின் கவலைகள் எவ்வாறு அரசாங்கத்தால் கேட்கப்பட வைக்க முடியும் ?**

**செனட்டர் பேமன் :** இங்குள்ள அனைத்து பன்முக கலாசார சமூகங்கள் மற்றும் புலம்பெயர்ந்த சமூகங்களுக்கு எனது செய்தி என்னவென்றால் 'உங்கள் குரல் முக்கியமானது. நான் உங்கள் பின்னால் என்றும் இருப்பேன்'

எந்த அரசாங்கமோ அல்லது அவர்களைச் சுற்றியுள்ள மற்ற அமைப்புகளோ தங்களுக்கு மட்டுமே அதிகாரம் இருப்பதாக உங்களை நம்ப வைக்க விரும்பினாலும், அதிகாரம் என்பது எப்போதும் மக்களிடம் மட்டுமே உள்ளது என்பதை நாம் உணர வேண்டியது அவசியம். எனவே நாம் நமக்கான அரசியல் அமைப்பில் ஈடுபட வேண்டும். அதனால் உள்ளாட்சி, மாநில மற்றும் மத்திய தேர்தல்கள் எதாவது அமைப்பில் ஈடுபட்டு தொண்டாற்ற முடியாவிட்டாலும் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும். நீங்கள் வாக்களிக்காமல் போனால் உங்களுக்கான தலை வரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் போகும். உங்கள் குறை களை சீண்டுவார் யாருமிருக்கமாட்டார்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வேட்பாளர்களின் சுயவிவரங்கள் மற்றும் கொள்கைகளை பரிசீலித்துப் பார்க்க வேண்டும், ஏனெனில் அப்படிப் பார்க்காமல் வாக்களித்தால் அவர்கள் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தப் போவதில்லை.

எங்கள் புலம்பெயர்ந்த சமூகங்கள் உண்மையில் விழிப்பு ணர்வுடன் இருப்பதைப் பார்க்க பெருமையாக இருக்கிறது. தேர்தல் நேரம் நெருங்கி வருகிறது. நீங்கள் கீழ்சபை யில் லேபர் கட்சிக்கு வாக்களித்தாலும் , செனட் சபையான மேல்சபையில் நீங்கள் ஆஸ்திரேலியாவின் குரலுக்கு வாக்களிக்கலாம். அப்பொழுது தான் பல்வேறு சமூகங்களின் குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் .உங்களின் குரலாக தொடர்ந்து தொண்டாற்ற முடியும் .கடந்த நாட்களில் கூட, தமிழ் அகதிகள் சங்கத்தை சார்ந்த தலைவர்களை சந்தித்தேன் .அது தொடர்பாக நான் குடிவரவு அமைச்சருக்கு கடிதம் எழுதினேன், நிரந்தர வதிவிடத்திற்காக காத்திருக்கும் தமிழ் அகதிகள் மற்றும் விசா அந்தஸ்து புதுப்பிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய முடிவைப் பெறுவதற்கு தொடர்பான விடயங்களை துரிதப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் டோனி பர்க்கிற்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளேன். ஏனென்றால், துரதிர்ஷ்டவசமான இரண்டு தமிழ் இளைஞர்களின் மரணத்திற்குப் பிறகும் அரசாங்கம் மிகவும் மெத்தனமாக இருப்பதைப் பார்ப்பது மிகவும் வேதனையாக இருக்கிறது.

# அகம், புறம், சங்க(ம)ம்
## கடவுள் இலவே!





ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல்நின் றவர்.

இந்த திருக்குறளின் பொருளாவது "பகைவர்களே!, எங்களது வீரம் மிகுந்த தலைவன் முன்பு எதிர்த்து நிற்க சிறிதும் துணியாதீர்கள் . ஏனெனில் அவரை (என் தலைவனை) வீழ்த்துவேன் என்று வெற்றுச் சாகசம் செய்த பகைவர்கள் எல்லோரும் அவரிடம் போரிட்டு வீழ்ந்து நடுகற்களாய் அவரவர் வீட்டில் (நாட்டில்) நிற்கின்றனர்' என்பதாகும். இந்த குறளுக்கு எழுத்தாளர் ஜெயமோகன் வேறு ஒரு உரை கூறியதாக நினைவு. இந்த திருக்குறளை ஒப்பிட்டு பார்த்தோமானால்,தலைவரையும் அவரது வீரர்களையும் நேருக்கு நேர் தைரியமாக போரிட்டதால் நடுகற்களாய் பகைவர்கள் நிற்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. போர்க்களத்தில் சண்டையிட்டு மாண்டு போன வீரர்களுக்கு ஈமக்கடன் ஈந்து கல் நட்டு வழிபடுவது நமது பண்டைய தமிழ் மரபு ஆகும். இவ்வாறு நடப்பட்ட கற்களே நடுகற்கள். தமிழகத்தில் சங்க காலம் தொட்டே வீரர்களுக்கு நடுகல் வைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

2008ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற மாவீரர் நினைவு நாள் விழாவில் வைகோ உரை நாம் எல்லோரும் கேட்டிருப்போம். அது போன்ற உணர்ச்சிமிக்க உரையினை நான் அதற்கு முன்னர் கேட்டதில்லை. அப்படி வீரவசனம் பேசிய அவர் ஒரு தொகுதிக்காக இப்பொழுது கழக வாசலில் தவம் கிடப்பது காலத்தின் சோதனை. இதே வைகோ தான்வாரிசு அரசியலை எதிர்த்து தனிக் கட்சி ஆரம்பித்தார் என்பது தனிக்கதை. நமது மக்களின் தேசிய வியாதியான மறதி என்பது அரசியல்வாதிகளின் வரம் அல்லவா. வைகோவின் தமிழ் உரையினை கேட்பதென்பது ஒரு தனி அனுபவம் தான். அந்த உரையினைக் கேட்டு அப்பொழுது கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உரையில் , பண்டைய நாகரிகங்களில் எவ்வாறு மாவீரர்களுக்கு வீரவணக்கம் செய்தனர் என்பதை பற்றி மிக விரிவாக அவர் பேசியிருப்பார். கிரேக்க நாகரிகத்தில் போர்க்களத்தில் உயிரிழந்த வீரர்களின் எலும்புத்துண்டுகளை ஏதென்ஸ் மாநகரத்தில் வரிசையாக அடுக்கிவைத்து வீர வணக்கம் செலுத்துவது வழக்கம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது என்பதனை தொல்காப்பிய வரிகளை எடுத்துக் காட்டி வைகோ பேசியிருந்தார்.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபில்
பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர"

அதாவது நடவேண்டிய கல்லை மலையில் கண்டெடுத்தல், தேர்ந்தெடுத்த கல்லைக் கொண்டு வருதல், அந்தக் கல்லில் வீரனின் பெயரையும் சிறப்பையும் பொறித்து நீரில் கழுவுதல், பின்பு அதனை நடவேண்டிய இடத்தில் நட்டு மாலைகளிட்டுச் சிறப்புச் செய்தல், இறுதியாக அவ்வீரனின் புகழையும், பெருமைகளையும் வாழ்த்திப் பாடுதல் என்பதை தொல்காப்பியம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

மாங்குடி கிழார் எழுதிய புறநானூற்று பாடலில் நடுகற்களை பற்றிய பாடல் உள்ளது. இந்தப் பாடல் மாபெரும் போர் முடிந்த பின்பு முல்லை நாட்டின் நிலையினை மிக நுண்ணியமாகவும், எளிதாகவும் எடுத்துச் சொல்லும். போர் முடிந்த பிறகு சிற்றூருக்கு சென்ற புலவர் அங்கு தான் பார்த்த காட்சிகளை எடுத்துச் சொல்கிறார். மாவீரர்களின் நினைவைப் போற்றும் நடுகற்களைப்போல் சிறந்த கடவுள் இல்லை என்று மிகத்தெளிவாக சொல்கிறார்.

அடலருந் துப்பின்.. .. .. ..
குரவே தளவே குருந்தே முல்லையென்று
இந்நான் கல்லது பூவும் இல்லை
கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு

இந்நான் கல்லது உணாவும் இல்லை
துடியன் பாணன் பறையன் கடம்பனென்று
இந்நான் கல்லது குடியும் இல்லை
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்

கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.

திணை: வாகை. வாகைப் பூவைத் தலையில் சூடிப் பகைவரை வென்று ஆரவாரித்தல்.

துறை: மூதின் முல்லை. மறக்குடியில் ஆடவரைப் போலவே மகளிர்க்கும் வீரமுண்டு என்பதைக் காட்டுவதாகும்

அருஞ்சொற்பொருள்: அடல் ஸ்ரீ அழித்தல் துப்பு ஸ்ரீ வலிமை. குரவு ஸ்ரீ ஒரு வகையான செடி தளவு ஸ்ரீ செம்முல்லை குருந்து ஸ்ரீ குருக்கத்தி. பொறி ஸ்ரீ புள்ளி கிளர்தல் ஸ்ரீ நிறைதல். துடி ஸ்ரீ உடுக்கை குறிஞ்சிப் பறை ஒன்னாமை ஸ்ரீ பொருந்தாமை தெவ்வர் ஸ்ரீ பகைவர். மருப்பு ஸ்ரீ யானை தந்தம். பரவுதல் ஸ்ரீ வழிபடுதல். உகுத்தல் ஸ்ரீ தூவல்.

விளக்கம் : குரவமலர், தளவுமலர், குருந்த மலர், முல்லைமலர் ஆகிய இந்நான்கு மலர்களைத் தவிர வேறு எந்த மலர்களும் இங்கு இல்லை. கரிய அடிப்பாகத்தையுடைய வரகு, பெரிய கதிருடைய தினை , சிறிய கொடியில் விளையும் கொள்ளு , புள்ளிகள் நிறைந்த அவரைப்பயறு ஆகிய இவை நான்கைத் தவிர வேறு எந்த உணவுப்பொருட்களும் இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய இந்நான்கு குடிகளைத் தவிர வேறு எந்தக் குடிகளும் இல்லை. நமது உள்ளத்திற்கு எதிராக உள்ள பகைவரின் முன்னே நின்று அவர் படையெடுத்து முன்னேறி வருவதை தடுத்து, ஒளிறும் உயர்ந்த தந்தங்களுடைய யானைகளுடன் களமாடிக் கொன்று , தாமும் பகைவருடன் போராடி விழுப்புண் அடைந்து இறந்த மாபெரும் தியாகம் செய்த வீரர்களின் நடுகற்களைத் தவிர, நெல்லைத் தூவி வழிபடுவதற்கேற்ற வேறு எந்தக் கடவுளும் இங்கு இல்லை.

ஆமாம் தாய் மண்ணிற்காக பகைவர்களுடன் போராடி, தனது இன்னுயிரை இழந்த அந்த மாவீரர்களின் மகத்தான தியாகத்தைப் போற்றும்,நடுகற்களைத் தவிர எந்தக் கடவுளும் இங்கே இல்லை.






# கும்பிடப்போன பிரதமரும் கோயில் குழப்படிகளும்




● ஜே.ஜே

தீபாவளியென்றால் மக்கள் புத்தாடை அணிந்து கோவிலுக்கு போவார்கள் வெடி கொளுத்துவார்கள் இதுதான் காலகாலமாக எங்கள் ஊர்களில் நடைபெற்றுவரும் சம்பிரதாயமாக இருக்கும். ஆனால் ஆஸ்திரேலியாவிலோ அதற்கு நேர்மாறு. தீபாவளி என்றவுடம் அரசியல்வாதிகள் தான்பல்லினத்தவர்களினதும் கோயி-ல் வாசலெங்கும் செல்வார்கள். அவர்களுக்கு கோயில் மணியகாரர்கள் "தலைப்பாகை" கட்டி அழகு பார்ப்பார்கள். இதுதான் ஆஸ்திரேலியாவில் பல கோயில்களில் நடைபெற்று வருகின்றது. இனி விடயத்துக்குள் வருவோம்.

சிட்னியில் ஈழத்தமிழர்களின் முக்கியமான இடங்களில் அல்லது அடையாளங்களில் ஒன்று, சிட்னி முருகன் கோயில். தேர்தல் காலம் நெருங்குவதால், 'தீபாவளி வாழ்த்தைச் ஒருக்கா சொல்லிப்போட்டு வாக்குகளுக்கு அடித்தளம் போட்டுவிட்டு வருவோம்' என்ற ரீதியில் சிட்னி முருகன் ஆலயத்துக்கு ஒரு விசிட் அடித்திருக்கிறார் நாட்டின் பிர-தமர் அல்பானீஸ். ஆனால் பிரதமரின் வருகையும் அன்று நடந்த சம்பவங்களும் பலரை முகம் சுழிக்க வைத்துள்ளன.

பிரதமரின் நகர்வலம் குறித்த செய்தியை பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் அன்ரூ சார்ல்ஸ்டனின் அலுவலகத்துக்கு இரண்டு கிழமைக்கு முன்னதாகவே அனுப்பி வைத்துள்ளது பிரதமரின் அலுவலகம். அன்ரூ சார்ல்ஸ்டனின் அலுவலகத்துக்குள் ஊடாடித்திரிந்த ரிஸி ரிஸிகேசன் என்பவர் இந்தத் தகவலை கோயில் தலைவரிடம் தெரிவித்து 'பிரதமர் கோயிலுக்கு வரப்போறார். ஆனால் தகவலை அடக்கி வாசிக்கவும்' என்றும் சொல்லியுள்ளாராம். 'நான் தான் பிரதமரரை அழைத்து வருகிறேன். வெளியே தெரிந்தால் குழம்பிவிடும்' என்ற எச்சரிக்கையையும் அவர் விடுத்துள்ளாராம். அத்துடன் 'பிரதமரின் வருகை நிகழ்வை நான் தான் தொகுத்து வழங்குவேன்' என்றும் ரிஸி கட்டளை பிறப்பித்துள்ளார். அவருடைய கட்டளையை கோயில்காரர்களும் பின்பற்றியுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, பிரதமர் வருவதற்கு மூன்று நாட்கள் முன்னதாக அன்ரூஸ் சார்ல்ஸடன், கோயில் நிர்வாகத்தின் அரசியல் தரப்புகளுடன் பேச்சு நடத்தும் ஒருவரை தொடர்பு கொண்டு , 'பிரதமர் கோயிலுக்கு வருகிறார். அதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளீர்கள்தானே? மக்கள் அதிகளவு வந்தால் தான் பிரதமருக்கு மதிப்பாக இருக்கும்' என்று முன்னர் சொன்னதற்கு மாறாக கேட்டிருக்கிறார். கோயில்காரர் அதற்கு பின்னர் தான் அடித்து பிடித்து ' பிரதமர் கோயிலுக்கு வருகிறார். எல்லோரும் வாங்கோ வாங்கோ' என்று பலருக்கும் மின்னஞ்சலில் தகவலை அனுப்பினர்.

ஒரு மாதிரி அடிச்சு பிடிச்சு கூட்டத்தை கூட்டி ஒரு பூசையை போட்டு விபூதியை மட்டும் கோயில்காரர் பூசிவிட்டனராம்.

இந்த இடைநடுவில் 'நான் தான் தொகுத்து வழங்குவேன்' என்ற ரிஸிகேசன், பிரதமரின் சட்டையை வாலைப் போல பிடித்துக்கொண்டு திரிந்திருக்கிறார். பலர் சாடைமாடையாகச் அவர் கேட்டபாடில்லையாம். பூசை முடிந்த பின்னர் நிகழ்வு நடைபெறும் மேடையில் பிரதமர், அன்ரூஸ் சார்ல்ஸ்டன் அகியோர் ஏறி அமர்ந்தனர். அதன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் இருந்து தெரிவான மாநில நாடாளுமன்ற உறுப்பினரும் மேடையேறி பிரதமரின் அருகில் அமர முற்பட்டார். அப்போது எங்கிருந்தோ ஓடிவந்த ரிஸிகேசன், அவரை இழுத்து தள்ளிவிட்டு அந்தக் கதிரையில் தான் அமர்ந்திருக்கிறார்.

இந்தச் சம்பவத்தை அவதானித்த மக்கள் சத்தமாக உச்சு கொட்டத் தொடங்கிவிட்டனர். இந்த சம்பத்தை தொடர்ந்து கோபத்தின் உச்சிக்கு சென்ற மாநில நாடாளுமன்ற உறுப்பினர் வெளியேறி நடக்கத் தொடங்கிவிட்டார். பின்னர் பலர் சென்று அவரை சமாதானப்படுத்தி இருக்கின்றனர்.

"நான் இந்தக் கோயிலுக்கு 25 வருடங்களாக வருகின்றேன். நீர் யார் என்னைத் தள்ளிவிட? "- என்று அவர் ரிஸியை பார்த்து கேட்டார். இத்தனை நிகழ்வுகளையும் பிரதமர் அவதானித்துக்கொண்டிருந்தார். அதன் பின்னர் கோயில் நிர்வாகம் கதிரை தேடி கொண்டு வந்தனர். அதன்பின்னர் நிகழ்வுகளை தொகுப்பதற்காக ஒலிவாங்கிக்கு முன் வந்த ரிஸிக்கு அறிவிப்புச் செய்ய ஒரு நிகழ்வுகளும் இருக்கவில்லை. நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ்த்தாய் பாடல் கூட பாடப்படவில்லை. சைவ மன்றத்தில் உள்ள இளையோர்களின் பங்களிப்பில் ஏதாவது ஒரு கலசார நிகழ்வு கூட இடம்பெற்றிருக்காமை கலந்து கொண்ட மக்கள் விசனத்தை வெளிப்படுத்த வாய்ப்பாக இருந்தது. ஆனால் கூடியிருந்த பெண்கள் அணியினர் சிலர் "அல்போ அல்போ ஐ லவ் யு" என்று கூக்குரல் மட்டுமிடவில்லை மாறாக முத்தமழையிலும் அல்போ வை நனையவிட்டார்களாம். முத்த மழையில் நனைந்த அல்போக்கும் சேர்ந்து வந்தவர்களுக்கும் பொன்னாடையால் போர்த்தி வழியனுப்பி வைத்தனர் கோயில் மணியகாரர்கள்.

இது ஒரு புறமிருக்க மாநில நாடாளுமன்ற உறுப்பினர் ஜூலிய ப்பின் மட்டும் ஒரு மணி நேரமாக தனக்கு நடந்த கொடுமைகள் குறித்த மக்களை தனித்தனியாக அழைத்து தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

அதுமட்டுமின்றி தனக்கு இழைக்கப்பட்ட தவறுக்கான மன்னிப்புக் கடிதம் தரவேண்டும் என்று கோயில நிர்வாகத்திடமும் அவர் வலியுறுத்தினார். ஆனால் கோயில் நிர்வாகமோ'ரிஸி எங்கட ஆள் இல்லை. அவர் லேபர் கட்சியை சேர்ந்தவரே' என்று தங்கள் பக்க நியாயத்தைத் தெரிவித்தாக தகவல். குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்டது போல, பிரதமர் வருகையால் கோயிலுக்கு பிரபலம் கிடைக்கும் என நினைத்து கடைசியில் கோயில் நிர்வாகம் சேறு பூசிக்கொண்டதுதான் மிச்சம்.



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ஒரே கொள்கை, ஒரே திராவிட தமிழ்தேசிய போலிக் கழகம்



**1995** ஆம் ஆண்டு ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில் மம்முட்டி நடிப்பில் வெளியான மக்களாட்சி திரைப்படத்தில் மம்முட்டியின் கையில் கணக்கில் வராத கோடிக்கணக்கான பணம் கிடைத்துவிடும். ஆனால் அதை எப்படி அனுபவிப்பது என்று தெரியாமல் தவிக்கும்பொழுது , ஆர். சுந்தரராஜன் ஒரு யோசனை சொல்லுவார். அதாவது " நாம ஆட்சிக்கு வருவதற்காகவா அரசியலுக்கு வருகிறோம்? அவனவன் அரசியலுக்கு வந்து சம்பாரிப்பான். நமக்கு கிடைச்ச பணத்தை அனுபவிக்க அரசியலுக்கு வருகிறோம். கறுப்பு பணத்தை வெள்ளையாக்குவதற்கு அரசியலை விட எளிய வழி எதுவுமில்லை. அரசியல் தான் சர்வரோக நிவாரணி. கட்சிக்கு நன்கொடை கறுப்பசாமி ,முனிசாமி கொடுத்தான் என பணத்தை வங்கியில் செலுத்திவிட்டால் அது வெள்ளையாகி விடும் தானே " என்று சொல்வார். தமிழ்நாட்டில் கோடிக்கணக்கில் பணம் வாங்கி நடித்த விஜய் அடுத்து என்ன செய்வார்? எல்லோரையும் போல கட்சி ஆரம்பிப்பது தானே.

தமிழ்நாட்டில் நடிகர்களுக்கு ஒரு நான்கு படம் ஓடி ஓரளவுக்கு அவர்கள் முகம் மக்களுக்கு பழகிவிட்டால் உடனே அவர்களுக்கு முதல்வர் ஆசை வந்துவிடுவது இயல்புதானே. இதற்கு முன்னர் தமிழ்நாட்டில் கட்சி ஆரம்பித்தவர்கள் 9 நடிகர்கள். ஏற்கனேவே இருந்த கட்சியில் சேர்ந்தவர்களை இங்கே குறிப்பிடவில்லை. தனிக்கட்சி ஆரம்பித்தவர்கள் மட்டும் இங்கே குறிப்பிட்டால் உங்களுக்கு நான் சொல்ல வந்த விடயம் புரிந்துவிடும்.

1. கமல்ஹாசன் - மக்கள் நீதி மய்யம் (எம்என்எம்)
2. சீமான் ( நாம் தமிழர் கட்சி )
3. சரத்குமார் - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
4. கார்த்திக்- அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி.
5. கே.பாக்யராஜ் - எம்ஜிஆர் மக்கள் முன்னேற்றக் கழகம் (எம்ஜிஆர் எம்எம்கே)
6 .டி.ராஜேந்தர் - அகில இந்திய லட்சிய தி.மு.க
7.சிவாஜி கணேசன் - தமிழக முன்னேற்ற முன்னணி (டிஎம்எம்)
8. விஜயகாந்த் - தேசிய முற்போக்கு திராவிட கழகம்
9. எம்ஜி ராமச்சந்திரன் (எம்ஜிஆர்) - அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்(அதிமுக) .

இதில் கடைசி இருவர்களை தவிர மற்ற எல்லாம் பெயரளவில் கட்சியாகவோ அல்லது பெரிய கட்சியில் தங்களை இணைத்துக்கொண்டுவிட்டு கால மாற்றத்தில் காணாமல் போகிவிட்டனர். யாராலும் எம்.ஜி.ஆர் போல் ஆக முடியவில்லை. ஏனென்றால் அவரைப் போல் மக்களை நன்கு அறிந்தவர் கிடையாது. அவருக்குத் திரையில் கிடைத்த பெயரினையும் ,தன்னை நம்பி வந்த கூட்டத்தினையும் சரியாகப் பயன்படுத்தி அரசியலில் வெற்றிவாகை சூட தேவையான அறிவும் ,அவரைச் சுற்றி அரசியலில் தேர்ந்த இரண்டாம் கட்டத் தலைவர்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேதியியலில் சில குறிப்பிட்ட தனிமங்களை அவற்றின் இயற்பியல், வேதியியல் பண்புகளைப் பொறுத்து அவற்றை உலோகம் அல்லது அலோகம் எனப்பிரிக்கலாம். எனினும் உலோகப் போலிகள் (Metalloids) என்பது சில தனிமங்கள் இரண்டும் கலந்த பண்புகளைப் பெற்றுள்ளன. இவை உலோகப்போலிகள் என்றழைக்கப்படுகின்றன. அதே போன்று தமிழ் நாட்டில் தமிழென்றும் ,தேசியமென்றும், திராவிடமென்றும் கூறிக்கொண்டு இதில் எந்தப் பண்புகளு மற்ற வெற்றுக்கூச்சல் போடும் கூட்டங்கள் பல உண்டு. அவைகளை செல்லமாக கழகங்கள் என்று அழைப்பது வழக்கம். அதாவது நேரத்திற்கு தகுந்தபடி தங்களது வேடங்களை நிமிடத்திற்கொரு முறை கலைப்பதில் கில்லாடிகள் இவர்கள். இந்தக்கூட்டத்தில் இன்னொரு வரவு தான். தமிழக விஜய் கழகம் . அதாவது விஜய் என்பது சமஸ்கிருதம் என்பதால் வெற்றிக் கழகம் . தமிழ்நாட்டில் வெட்டியாக பேசிக்கொண்டு தங்களது எதிர்காலத்தை பாழாக்கி கொண்டுவரும் ஒரு பெருங்கூட்டத்தின் திரளாகை யால் அதனை நாம் தமிழக வெட்டிக் கழகம் என்றும் அழைக்கலாம்.

தமிழ்நாட்டின் அதிக சம்பளம் நடிப்பிற்காக (? ) வாங்கும் நட்சத்திரங்களில் ஒருவரான விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகத்தை உருவாக்குவதாக அறிவித்திருந்தார். இதற்கிடையே கடந்த மாதம் நடிகர் விஜய் தனது கட்சியின் முதல் மாநில மாநாட்டை விழுப்புரத்தில் வெற்றிகரமாக நடத்தி காட்டியிருக்கிறார். இந்த மாநாட்டில் தனது கட்சியின் கொடியை ஏற்றிய பின் நடிகர் விஜய் தொண்டர்களிடம் உரையாற்றினார். நன்கு தயாரிக்கப்பட்டு ,பலமுறை ஒத்திகை பார்க்கப்பட்டு நிகழ்த்திய உரை போல இருந்தது. பொதுவாக கூச்ச சுபாவம் மிகுந்தவர் என்றும் , இதுவரை பொதுவில் பேட்டி / உரை என்று வெகுவாக கலந்து கொள்ளாத விஜய் எப்படி பேசப்போகிறார் என்று எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்பார்ப்பினை ஓரளவுக்கு பூர்த்தி செய்தார் என்றே சொல்லவேண்டும். தமிழ்த் தேசியமும், பெரியாரின் திராவிடமும் தனது கட்சியின் இரு முக்கியமான கொள்கைகளாக அவர் பிரகடனப்படுத்தினார். இரு மொழிக் கொள்கை, சமூக நீதி, சமத்துவம், மதச்சார்பின்மை, சமூகவுடைமை (சோசலிசம்) மற்றும் மக்களாட்சி (ஜனநாயகம்) போன்ற கொள்கைகளை கட்சி நிலைநிறுத்தும் என்றும் பெரியார், அம்பேத்கர், காமராசர், வேலு நாச்சியார் மற்றும் அஞ்சலி அம்மாள் ஆகியோரை சித்தாந்த வழிகாட்டிகளாக தமிழக வெற்றிக் கழகம் ஏற்றுக்கொண்டதாகவும் விஜய் மாநாட்டில் பகிர்ந்து கொண்டார். ஆனால் பெரியாரின் இறைமறுப்பு சித்தாந்தத்தை தவிர்த்து பிற (பெண்களுக்கு அதிகாரமளித்தல், பகுத்தறிவு சிந்தனை, சமூக நீதி, சமத்துவம்) கொள்கைகளில் அதிகம் கவனம் செலுத்துவோம் என்றார் . தொடர்ந்து பிளவு வாத அரசியலுக்கு எதிராக தான் செயல்படுவேன் என்று மத்தியில் ஆளும் பா.ஜ.க வையும் , பெரியார், அண்ணா பெயரை சொல்லிவிட்டு திராவிட மாடல் என்ற பெயரில் ஒரு குடும்பம் கொள்ளையடிக்கிறது என நேரடியாக தி.மு.க வையும் தாக்கி பேசிவிட்டு யாருக்கு எதிராக தாங்கள் அரசியல் நடத்துகிறோம் என்றும் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

முதல் மாநாடு நடத்துவதும் ,பெருந்திரளான மக்களை கூட்டிவந்து தனது வலுவை காட்டுவதெல்லாம் பெரிய விஷயமில்லை.இதைவிட அதிகமான கூட்டம் நடிகர் சிரஞ்சீவி தனது பிரஜா ராஜ்ஜியம் கட்சியை தொடங்கியபோது வந்தது. ஆனால் அவரால் வெறும் 16 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. அரசியலில் ஏன் எம்.ஜி.ஆர் வெற்றி பெற முடிந்தது? .அதற்கு பின்னால் அயராத உழைப்பு, திரைப்படங்களின் மூலம் அவரடைந்த புகழ் , ஏற்கனவே அரசியலில் பங்கேற்ற அனுபவம் ,மக்களுடன் நேரடித் தொடர்பு, திமுகவிலிருந்து விலகிவந்து அவருடன் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகள் என்ற மாபெரும் இயக்கம் போன்ற பல காரணங்கள் இருந்தன. நடிகர் விஜய், எம்.ஜி.ஆர் ஆவது சாத்தியமில்லையென்று தான் தோன்றுகிறது. ஜெயலலிதா மறைந்த பின்னால் அதிமுக நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது. அந்த வெற்றிடத்தை விஜய் நிரப்பக்கூடும். திரையில் வில்லன்கள் முன்னால் தொடையை தட்டி வீரவசனம் பேசுவது எளிது. அரசியல் களம் என்பது வேறு. அவர் சீமான் ,உதயநிதி , அண்ணாமலை , திருமாவளவன், ராமதாஸ் போன்ற சுறாமீன்களை சந்திக்கவேண்டும். அறிக்கை விடுவது எளிது. விஜய் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களிடம் தொடர்பு ஏற்படுத்தவேண்டும். கட்சியில் இரண்டாம் கட்ட தலைவர்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். நிறைய சவால்கள் காத்திருக்கின்றன.

நடிகர்களால் நாட்டை ஆள முடியுமா? என்று கேட்பவர்களுக்கு உங்கள் பதில் என்ன?

" ஐந்தாண்டுகள் முடியட்டும். மக்கள் என்ன சொல்கிறார்களோ, அதுவே என்னுடைய பதிலாக இருக்கும்."

**1977**-இல் தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர் பதவியேற்றபோது நிருபர்கள் கேட்ட கேள்விக்கு அவரது பதில் இதுவாகும். தமிழ்நாட்டு அரசியல் களத்தில் எத்தனையோ நடிகர்கள் எம்.ஜி.ஆரைப் பார்த்து, தாமும் அரசியலில் இறங்கி புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்டது போல வந்த வழி திரும்பிச் சென்ற கதை தெரியும் தானே. விஜய் புலியா ,பூனையா என்பதற்கும் காலம் பதில் சொல்லும்.

I'm waiting !!!

# சிலப்பதிகாரம்
# SILAPATHIKARAM
Tamil Traditional Theatre



6 & 8 December 2024
Drum Theatre, Dandenong

TICKETS 30% OFF FOR A LIMITED TIME!

A 1800-Year-Old Masterpiece performed in Tamil with English interpretation

Enjoy a night of mesmerising traditional dances and beautiful music!

Proudly supported by

GREATER DANDENONG City of Opportunity

AUS தமிழ் TV





Best Start
Best Life



## இலவசக் கின்டர்: உங்கள் குழந்தையை 2025 ஆம் ஆண்டிற்காப் பதிவு செய்யுங்கள்

விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவசக் கின்டர் கிடைக்கிறது. இதனால் ஒரு குழந்தைக்கு ஆண்டு ஒன்றிற்கு $2,563 வரை குடும்பங்களால் சேமிக்க முடியும்.

இரண்டு ஆண்டுகளுக்கான கின்டர் உங்கள் பிள்ளை அவர்களின் முக்கிய திறன்களை வளர்த்துக் கொள்ள உதவும். எனவே அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.

இலவசக் கின்டர் அனைவருக்குமானது . உங்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்றவை) தேவையில்லை.

மேலும் தகவல்களை அறிய இங்கு பார்வையிடுங்கள் vic.gov.au/kinder/tamil

THE EDUCATION STATE | VICTORIA State Government | Department of Education | KINDERGARTEN Victorian Government Approved

Transco CARGO

# THIS YEAR CHRISTMAS WILL BE AWESOME

| Month | Final Cut Off Date | Estimated Arrival Date |
|---|---|---|
| August | 2024 -08 - 03 | 2024 - 09 - 13 |
| August | 2024 - 08 - 10 | 2024 - 09 - 20 |
| August | 2024 - 08 - 17 | 2024 - 09 - 27 |
| August | 2024 - 08 - 24 | 2024 - 10 - 04 |
| August | 2024- 08 - 31 | 2024 - 10 - 11 |
| September | 2024 - 09 - 07 | 2024 - 10 - 18 |
| September | 2024 - 09 - 14 | 2024 - 10 - 25 |
| September | 2024 - 09 - 21 | 2024 - 11 - 01 |
| September | 2024 - 09 - 28 | 2024 - 11 - 08 |
| October | 2024 - 10 - 05 | 2024 - 11 - 15 |
| October | 2024 - 10 - 12 | 2024 - 11 - 22 |
| October | 2024 - 10 - 19 | 2024 - 11 - 29 |
| October | 2024 - 10 - 26 | 2024 - 12 - 06 |
| November | 2024 - 11 - 02 | 2024 - 12 - 13 |
| November | 2024 - 11 - 09 | 2024 - 12 - 20 |
| November | 2024 - 11 - 16 | 2024 - 12 - 27 |
| November | 2024 - 11 - 23 | 2025 - 01 - 03 |
| November | 2024 - 11 - 30 | 2025 - 01 - 10 |
| December | 2024 - 12 - 07 | 2025 - 01 - 17 |
| December | 2024 - 12 - 14 | 2025 - 01 - 24 |
| December | 2024 - 12 - 21 | 2025 - 01 - 31 |



## Now We do Air Tickets



Transco TRAVELS

LIONXPRESS POWERED BY TranscoCargo

Your Essentials to Sri Lanka

## Within 7 Days?



45 Adrian Rd, **CAMPBELLFIELD** - **(03) 9357 7228**
206-208 Discovery Road, **DANDENONG SOUTH** - **(03) 9703 2255**

follow us on

*We love to deliver*

SYDNEY - **02 9897 0004** | BRISBANE - **07 3219 0203** | ADELAIDE - **08 8322 8825** | PERTH - **08 9452 7707** | CANBERRA - **02 62821905** | DARWIN - **08 79790002** | TASMANIA - **03 90174167**

**1300 1 TRANSCO** (1300 187 267) | **WWW.TRANSCOCARGO.COM.AU**